

# கோடுகளால் பேசியவன்

# கோடுகளால் பேசியவன்

ஊடகவியலாளர் அமரர் **அஸ்வின் சுதர்சன்**
**நினைவாக...**



# நூன்முகம்

**நூல்**

கோடுகளால் பேசியவன்

**நூலின் தன்மை**

நினைவு வெளியீடு

**வெளியீடு**

ஊடகவியளாளர் அஸ்வின் சுதர்சன்

நினைவுக்குழு,

யாழ்ப்பாணம்

**பதிப்பு**

2017 செப்ரெம்பர் 24

**அளவு**

A5

**பிரதிகள்**

300

**வடிவமைப்பும், அச்சுப்பதிப்பும்**

தேவி Printers

140/1, மானிப்பாய் வீதி,

யாழ்ப்பாணம்.

021 300 3030



பற்றிக் அல்பேட் அஸ்வின் சுதர்சன்





# ஆளுமையின் ஆவணத்தில்...

அஸ்வின்,

ஊடகம் யாவும் மனிதகுல மேம்பாட்டிற்காகவே என நாளும் உரைத்தவன். உண்மையாக வாழ்ந்தவன். அப்படி ஒரு உண்மை மனிதனின் எழுத்து ஆவணத்தில் உங்களைச் சந்திக்கின்றோம். காட்டூன், ஓவியம், பத்தி எழுத்துக்கள், கட்டுரைகள், குறுந்திரைப்படங்கள், விமர்சனங்கள், செய்திகள், நாடகங்கள், நடிப்பு, இலத்திரனியல், தொடர் பாடல் திறன் என நீளும் அவனது திறமைகள் பல.

இலங்கைத் தமிழ் பேசும் உலகில் ஊடகவியலாளர் என்ற சொல்லுக்கு முழுமையான தகுதியுடைய விரல் விட்டு எண்ணக்கூடியவர்களுள் ஒருவன். சுடரொளி, வீரகேசரி, யாழோசை, தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றிய காலங்களில் தனது தனித்துவ முத்திரைகளைப் பதித்தவன். மாதகல் மண் தந்த நல் முத்துக்களில் ஒன்று.

எழுத்துலகில் பன்முக ஆளுமையுடன் திகழ்ந்த அஸ்வின் தினக்குரல் காட்டூன்கள் மூலம் அதிகம் பேசப்பட்டான். அரசியல் அரங்கில் நிகழ்காலம், எதிர்காலம் பற்றியெல்லாம் தீர்க்க தரிசனமாக பேசினான்.

பெற்றோர், உற்றோர், ஆசிரியர்கள், சகமாணவ நண்பர்கள், ஊட

கவியலாளர் யாவரிடமும் நன்மதிப்பைப் பெற்ற ஒருவனாக வாழ்ந்தான். குறுகிய வாழ்நாள் காலத்தில் சாதனைகள் பலவற்றை நிகழ்த்தினான்.

2011ஆம் ஆண்டில் இலங்கை பத்திரிகை நிறுவனத்தினால் பத்தி எழுத்துக்களுக்கான சிறந்த பத்திரிகையாளர் விருதைப் பெற்றுக் கொண்டான். இலங்கையில் தமிழ் தேசியம் மக்களை உண்மையாகவே பாதுகாக்க வேண்டும் என்ற பேரவாவை நாளும் வெளிப்படுத்தியவன். உண்மையாகவே வாழ்ந்தவன்.


இலங்கைத் தமிழரின் வாழ்வியல் ஆவணங்கள், சான்றாதாரங்கள், வரலாற்றுச் சின்னங்கள், பொருள்கள் ஆவணப்படுத்தப்பட வேண்டுமென நாளும் உழைத்தவன். பொய்மை நிறைந்த உலகில் உண்மைகளால் வாழ்வை நிறைத்தவன். குடும்பத்திற்காக பொருளாதார வளம் தேடி மேற்கு ஐரோப்பாவிற்கு புலம் பெயரும் வழியில் உக்ரெய்ன் நாட்டில் காலம் அவனைக் காவு கொண்டது.

தான் வாழ்ந்த சமூகத்தை அவன் உண்மையாக நேசித்ததால் நாமும் அவனை நேசிக்கின்றோம். அவனது பாதங்களில் இந்த நூலைச் சமர்ப்பிக்கின்றோம்.

**ஊடகவியலாளர் அமரர் அஸ்வின் சுதர்சன் நினைவுக் குழு,**

**யாழ்ப்பாணம்,**

*24.09.2017*



# அஸ்வினின் ஆளுமை ஆச்சரியப்படுத்தியது

**வீரகத்தி தனபாலசிங்கம்**
முன்னாள் பிரதம ஆசிரியர்,
தினக்குரல்

கேலிச் சித்திரங்கள் மொழி கடந்தவை. கட்டுரைகளாக, செய்திகளாக எழுதி உணர்த்த முடியாத கருத்துகளைக் கூட கேலிச் சித்திரங்கள் இலகுவாக பாமரன் முதல் மாற்று மொழியைக் கொண்டவர் வரை புரியவைத்து விடும். அவ்வாறானதொரு பொறுப்பும் உணர்வும் மிக்க பணியைத்தான் அஸ்வின் சுதர்ஷன் வரித்துக் கொண்டு இறுதிவரை தன் இனத்துக்கு காத்திரமான பங்களிப்பை வழங்கியிருந்தார்.

அஸ்வின் சுதர்ஷனை நான் முதலில் பெரிதளவில் அறிந்திருக்க வில்லை. அவர் சுடரொளி, வீரகேசரி போன்ற பத்திரிகைகளில் கார்ட் டூனிஸ்டாக இருந்த பின்னர் தினக்குரல் பத்திரிகையில் 2015 ஆம் ஆண் டளவில் இணைந்தபோது நான் அங்கிருக்காததினால் அவரை பயன் படுத்திக் கொள்ளும் வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை. எனினும் அவரை தினக்குரல் நன்கு பயன்படுத்திக் கொண்டதனால் அஸ்வினின் ஆளு மையை நான் அடையாளம் கண்டு கொண்டேன்.

ஒரு சிறந்த கார்ட்டூனிஸ்டுக்கு கூர்மையான கருத்தும் ஆழமான சிந்த

னையும் நகைச்சுவை உணர்வும் கலாரசனையும் கற்பனைத் திறனும் இன்றியமையாதவை. அவ்வாறான திறன்களைப் பெற்ற ஒருவரே முழு மையான கார்ட்டூனிஸ்டாக முடியும். அந்த வகையில் அஸ்வினை முழு மையான ஒரு கார்ட்டூனிஸ்டாக அவரின் கேலிச் சித்திரங்கள் அடை யாளம் காட்டின.

அன்றாட அரசியல், சமூக நிகழ்வுகளை அஸ்வின் கேலிச் சித்திரங் களாக வடித்த விதம் என்னை பல தடவைகள் ஆச்சரியப்படுத்தியது. இளம் வயதில் இவ்வளவு ஆற்றலா என நான் வியந்ததுண்டு. வெறும் கைகளால் மட்டுமன்றி கணினி மூலமும் கேலிச் சித்திரங்கள் வரையும் திறமையை அஸ்வின் பெற்றிருந்தார்.

அன்றாட அரசியல் நிகழ்வுகளையும் அரசியல்வாதிகளையும் அஸ்வி னின் கேலிச் சித்திரங்கள் களமாகக் கொண்டிருந்தன. சில அரசியல் தலைவர்கள், அரசியல்வாதிகளின் போலி முகங்களையும் அஸ்வின் தன் கேலிச் சித்திரங்கள் மூலம் தோலுரிக்கத் தவறவில்லை. இவ்வா றாக மிக இளம் வயதில் கனதியான பணியை தன் இனத்துக்காக செய்து வந்த அஸ்வின் சுதர்ஷனை நாம் சடுதியாக இழந்தது எமது துரதிர்ஷ்டமே.

அஸ்வின் சுதர்ஷனின் ஆத்மா சாந்தியடையட்டும்.



# கார்ட்டூன்களில் வாழும் அஸ்வின்

**பாரதி இராஜநாயகம்,**
ஆசிரியர், ஞாயிறு தினக்குரல்.
கொழும்பு-15.

அஸ்வின் சுதர்சன் வரைந்த கார்ட்டூன்களைத் தொகுத்து தனியான ஒரு நூலாக அவரது நினைவு தினத்தில் வெளியிடுவது வரவேற்கத்தக்க ஒரு முயற்சி. அவரது கார்ட்டூன்கள் அந்தக் காலத்து அரசியல், சமூக நிலைமைகளைப் பிரதிபலிப்பவையாக இருந்தாலும் காலத்தால் அழி யாதவை.

கார்ட்டூன் உலகில் தனக்கென தனியான ஒரு இடத்தைப் பிடித்திரு ப்பவர் அஸ்வின். அவரது கார்ட்டூன்கள் தனித்துவமானவை. அவர் யாரையும் பின்பற்றி தனது கலையை வளர்த்துக்கொண்டவரல்ல. அவரது சமூக அக்கறைதான் அவரை ஒரு சிறந்த கார்ட்டூனிஸ்ட்டாக மாற்றியது என நான் நினைக்கிறேன்.

தினக்குரல் பத்திரிகைக்கு அவர் வந்த பின்னரே அவரை நான் நேரில் சந்தித்துப் பேசுவதற்கும், அவருடைய பணிகளை நேரில் அவதானிப்பதற் கும் வாய்ப்புக் கிடைத்தது. அநீதிகளையும், அநியாயங்களையும் கண்டு சீற்றமடையும் ஒருவராக அவர் இருந்தார். அவரது கார்ட்டூன்களில் இந்த சீற் றம் பிரதிபலித்தது.

சமூக அவலங்களையும், அரசியல் போலித்தனங்களையும் அம்பலப் படுத்துவதற்கு தனது கார்ட்டூன்களை அவர் பயன்படுத்திக்கொண்டார். ஒரு நீண்ட கட்டுரையில் சொல்லக்கூடிய விஷயத்தை ஒரு கார்ட்டூனில் வெளிப்படுத்துவதில் அவர் வல்லவர். அரசியல்வாதிகள் சிலருக்கு அவ ரது கார்ட்டூன்கள் எப்போதும் எரிச்சலைக் கொடுப்பதாகவே இருந்திருக் கின்றது. இருந்தபோதிலும் அதனை அவர்கள் ரசித்தார்கள்.

கார்ட்டூன்களில் அவர் காட்டிய ஆர்வத்தைப் போலவே குறும் படங் களைத் தயாரித்து வெளியிடுவதிலும் அவர் அக்கறை காட்டினார். அதுகூட சமூக அக்கறையைக் கொண்ட குறும்படங்களாகவே இருந்தன. தன்னைப் பெரிதாக வெளிப்படுத்திக்கொள்ளாமல், தனது பணியை சமூகத்துக் காகச் செய்ய வேண்டும் என்பதே அவரது இலக்காக இருந்தது.

மிகவும் சிறிய வயதிலேயே இவை அனைத்தையும் செய்த அஸ்வினி டம் சமூகம் இன்னும் பலவற்றை எதிர்பார்த்தது. சமூகம் மட்டுமல்ல நாமும் எதிர்பார்த்தோம். ஆனால், எமது எதிர்பார்ப்புகளை எல்லாம் சிதறடித் துவிட்டு, எதிர்பாராத விதமாக இளம் பராயத்திலேயே அவர் எம்மைவிட்டுப் பிரிந்தது அனைவரையும் அதிரவைத்த ஒரு சம்பவம்.

அவர் பிரிந்தாலும், அவர் குறுகிய காலத்துக்குள் வரைந்த கார்ட்டூன் கள் மூலம் அவர் வாழ்ந்துகொண்டிருக்கின்றார். அந்த நூலில் அவரை, அவரது சிந்தனைகளை நாம் தரிசிக்கின்றோம். இதனை நூலாக வெளி யிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்த நண்பர்களுக்கு இந்த இடத்தில் நன்றி சொல்ல வேண்டும்.



# மைகளைக் கொண்டு கைகளால் சித்திரம் வரைந்த கலைஞன் அஸ்வின்

**வி. அற்புதானந்தன்**
ஆசிரியர்
யாழ். தினக்குரல்

இலங்கைத் தமிழ் அச்சு ஊடகங்களில் கேலிச் சித்திரக் கலைஞர்களுக்கான வெற்றிடத்தை நிரப்புவதில் சமீப காலத்தில் பெரும் பங்காற்றியவர் அமரரான அஸ்வின் சுதர்சன்.

கேலிச் சித்திர வரை கலைஞராக மட்டுமன்றி செய்தியாளராக, விளையாட்டுச் செய்தியாளராக, கட்டுரையாளராக தன்னை பல படிகளில் அஸ்வின் இனம்காட்டினார். எனினும் அஸ்வின் வரைந்த கேலிச் சித்திரங்கள் அண்மைக் காலங்களில் இலங்கைத் தமிழ் அரசியல் மற்றும் பாதுகாப்புத் துறைகளில் பெரும் தாக்கத்தைச் செலுத்தியது. அவர் மறைந்த பின்னரும் தாக்கத்தைச் செலுத்திக்கொண்டிருக்கிறது.

ஆயிரம் வார்த்தைகளில் சொல்லக்கூடிய ஒரு விடயத்தை கோடுகளால் உணர்த்திவிடும் திறமை வரைகலைகள், புகைப்படங்களுக்குண்டு. அதனை தனது படைப்புக்கள் ஊடாக நிரூபித்தவர் அமரர் அஸ்வின்.

அரசியலின் சமகால போக்குகளையும், அரசியல்வாதிகளின் போக்குகளையும் தனது கோடுகள் மூலம் மிகச்சுலபமாக வெளிப்படுத்திவிடும் திறன் கொண்ட ஒரு ஊடகத்துறைக் கலைஞனாக அஸ்வின் மிகக் குறுகிய காலகட்டத்தில் தன்னை உருவாக்கிக் கொண்டார்.

காலச் சூழலுக்கும் மக்களின் விருப்பங்களுக்கும் ஏற்ப கேலிச் சித்திரக் கலையில் அஸ்வின் மாற்றத்தை உள்வாங்கி அதற்கேற்ப தனது கலைப்படைப்புக்களை வெளிக்கொணர்ந்தார்;

மைகளைக் கொண்டு கைகளால் வரையப்பட்ட கேலிச் சித்திரக் கலையை கணனிக்குள் கொண்டுவந்து காலத்துக்கு ஏற்ப மாற்றங்களை தமிழ் ஊடக கேலிச் சித்திரக் கலையில் புகுத்தியவர் அஸ்வின்.

"தினக்குரலில்" வெளிவந்த அவரதுகேலிச் சித்திரங்கள் மக்கள்மத்தியில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தன.

சமகால அரசியலை படம் போடுபவையாக அவரது படைப்புக்கள் அமைந்திருந்தன. தமிழ் அரசியல்வாதிகள் பலரின் போலி முகத்திரைகளை தனது தூரிகை கொண்டு கிழித்தெறிந்தவர் அஸ்வின். ஆனால் துரதிஸ்டம் ஒரு சிறந்த , துடிப்பான ஊடகத்தறை இளைஞனை காலம் எங்ளிடம் கனகாலம் விட்டுவைக்கவில்லை.

அவரது இழப்பால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் "தினக்குரல்" சார்பாக எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.



# ஈழத்துக் கேலிச்சித்திரங்களில் புதிய அவதாரம்

**இரத்தினம் தயாபரன்**
(சபாலிங்கம்,புஸ்பபரன்,டாம்போ,தூயவன்)
இணைப்பாளர், யாழ்.ஊடக அமையம்

எவனொருவன் மரணத்தின் பின்னரும் பேசப்படுகின்றானோ அவன் வாழ்வு வரலாறாகின்றது. எங்கேயோ வாசித்ததொன்று. நினைவிற்கு வாசித்த காலம் மட்டும் வந்து நிற்கின்றது.

ஊடகவியலாளர்கள் யாழ்ப்பாணத்தினில் கொல்லப்படுவதும் கடத் தப்படுவதுமாக கதைகள் பல அரங்கேறிக்கொண்டிருந்த காலமது.யாரே னுமொரு ஊடகவியலாளன் இயற்கையாக மரணித்தால் அது அப்போது பெரியதொருவிடயமாக பேசப்படுவதாக இருந்தது.

இத்தகையதொரு சூழலில் தான் அஸ்வினின் நட்புகிடைத்தது. வீரகேசரி வாரவெளியீட்டின் முக்கிய செய்தியாளனாக பணியாற்றிக் கொண்டிருந்த நிலையினில் பாதுகாப்பு கருதி செய்திகளை அனுப்ப வசதியாக பத்திரிகையின் யாழ்.அலுவலகத்தினில் தொலைநகல் அனுப் பும் ஏற்பாடுகளை அப்போதைய பிரதம ஆசிரியர் வீ.தேவராசா செய்தி ருந்தார். அதனோடு இணைந்து வீரகேசரி வெளியீடாக யாழ். ஓசை எனும் வார இதழை வெளியிட திட்டமிட்டிருந்தது.அதன் பெரும்பாலான பணி

கள் அஸ்வின் வசம் சென்றிருந்த நிலையினில் அரசியல் பத்தி எழுத என்னிடம் உதவிகோரியிருந்தான் அஸ்வின்.

யாழ்.ஒசையின் முக்கிய பக்கமாக அமைந்த அந்த அரசியல் ஆய்வினை அஸ்வினின் தொந்தரவிற்காகவே எழுதத் தொடங்கினேன்.ஏனைய பத்தி எழுத்தாளர்கள் போலவே தொற்றிக்கொண்டிருந்த சோம்பேறித்தனத்தை புரிந்து வெள்ளி வெளிவரும் யாழ் ஒசைக்காக திங்கட்கிழமையே கட்டுரை கேட்டு தொல்லைப்படுத்த அஸ்வின் இருந்தான்.ஆனால் அது அன்பான தொல்லையாகவே இருந்தது.

இரண்டடி நடந்தால் கொம்பு முளைத்துவிடுகின்ற இன்றைய ஊடக துறையினில் யாழ்.ஒசைக்காக ஆலோசனைகளை கேட்பதில் அவன் என்றுமே பின்னின்றதில்லை. எனது ஆலோசனையிலேயே நையாண்டியுடனான மக்கள் மனதில் நிற்கின்ற கருத்துக்களை கொண்டு செல்ல அஸ்வினால் முடிந்தது.

ஆனால் இவையினை தாண்டி அஸ்வினை அடையாளப்படுத்தியது அவனது தினக்குரல் கேலிச்சித்திரங்களே.ஆசிரிய பீடம் சொல்வதை கீறிக்கொண்டிருந்த அஸ்வினிற்கு இந்திய கேலிச்சித்திர நண்பர்கள் பலரை நான் தொடர்புபடுத்தி உதவினேன்.இந்திய கேலிச்சித்திர நண்பர்களால் திருவாளர் பொதுஜனமென அடையாளப்படுத்தப்பட்ட உருவமொன்றை தோற்றுவிக்கவும் அவற்றின் ஊடாக மக்களிடம் பேசவும் வைக்கவும் முடிந்தது.

இதனைப் பலமுறை சுட்டிக்காட்டியதை தொடர்ந்து அஸ்வினின் திரு வாளர் பொதுஜனமும் தோற்றம்பெற்றார். பெரும்பாலான சிங்கள கேலிச் சித்திரதாரர்களிடையே தமிழர்களை அடையாளப்படுத்த வெறும் நெற் றிப்பொட்டு மட்டுமேயிருந்த நிலையினில் தமிழர் பொதுசனங்களை அவன் தனித்து அடையாளங்காட்டினான்.

யாழ்.ஊடக அமையத்தின் தலைநகரிற்கான அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக நாடாளுமன்றம் வரை சென்று அவன் பேசியிருக்கின்றான்.

புதிதாக மேலும் பல கேலிச்சித்திரதாரர்களை தோற்றுவிக்கும் ஆர்வம் அவனிடமிருந்தது.

மரணத்தை தழுவுவதற்கு சிறிது நாட்களிற்கு முன்னர் கூட சூரியனில் உள்ள வெற்றிடத்திற்கு அவனை நான் சிபார்சு செய்தேன். ஊடகவியலாளனிற்கான நிரந்தர தொழிலைப் பற்றிய புரிதல் எனக்குண்டு.

ஆனாலும் நெருக்கடிகள் அதனால் ஏற்பட்ட மனச்சோர்வு நாட்டை விட்டு வெளியேறும் மனநிலையினை அவனுக்கு தந்திருந்தது.

நான் நேசித்த அஸ்வினின் மரணத்தை உலகிற்கு சொல்வதும் எனது கடமையானது.

இன்றும் சமூக ஊடகங்களில் நாள்தோறும் அஸ்வின் தனது கேலிச் சித்திரங்கள் மூலம் வந்து செல்கின்றான்.

ஆம் அஸ்வின் மரணத்தின் பின்னரும் பேசப்படுகின்றான். அவன் வாழ்வு வரலாறாகிப்போயுள்ளது.

ஈழத்தின் கேலிச்சித்திர உலகினில் சிரித்திரன் சுந்தர் எவ்வாறு பேசப்படுகின்றாரோ அவ்வாறே அஸ்வினின் வரலாறும் நினைவு கூரப் படும்.

நெடுதுயில் கொள் என் அன்புத் தம்பியே....



# நினைவுகளில் என்றும் பசுமையாய் நிறைந்துள்ளவன்

**அருட்பணி. பிலிப் றஞ்சனகுமார்**
(அ.ம.தி)

"சுதர்சன்"........"சுதர்சன்" அந்தப் பெயருக்கென்றே பொருத்தமானவன். நிதர்சனமாக என் மனக் கண்களில் நிலையாய் நிற்பவன். அவனை காண முடியாது என்று பலரும் இப்போது சொல்லலாம். ஆனால் வாழ்க் கையில் எம்முடன் பதித்த தடங்களை யாராலும் எம்மை விட்டு நீக்கி விட முடியாது. நடக்கும் ஒரு மிடுக்கான விதம். எப்போதும் நேர்த்தியாக துப்பரவாக அவன் அணிந்திருக்கும் ஆடைகள், சிரிப்புக்குள் இடையி டையே வந்து நிற்கும் அமைதி, எப்போதும் நாசித்துவாரத்தில் காற்றை உள்ளிழுக்கையில் வரும் சிறு ஓசை............ இன்னும் பலவற்றை சொல் வதானால் நட்புடன் பழகுவதில் அவனுக்கு நிகராக யாரும் இருக்க முடியாது. இறை பக்தி மிகுதியாய் கொண்டவன். ஏழைகளில் மிகுந்த இரக்கமுடையவன். மற்றவரை எப்போதும் மரியாதையோடு நோக்கி தூய்மையான வார்த்தைகளில் அவர்களை அணுகுகின்ற ஒரு நல்ல மனிதன் அவன்.

நான் பிறந்த மண்ணின் அயற்கிராமமாக இருந்தாலும் அந்த புது மையானவனைக் கண்டு கொள்வதற்கு 1992ற்கு பின்னரான யாழ்ப்பாண குடாநாட்டு தமிழ் மக்களின் இடப்பெயர்வு, குறிப்பாக வலிகாம மக்க


ளின் வாழ்வியல் மாற்றம் ஒரு பெரிய உதவியை புரிந்திருந்தது. மானிப் பாய் தூய அந்தோனியார் கோவிலுக்கு அருகில் அமைக்கப்பட்ட அந்த தற்காலிக முகாம் வாழ்க்கை தான் என்னை அவனுடன் இணைத்திருந் தது. அகதி முகாமில் வசிக்கின்ற காலங்களில் அந்த ஒரே மாதிரியான கொட்டில் வீடுகளில் ஒன்றில் தனது தாயின் சகோதரியின் பொறுப்பில் அந்த உயர்ந்தவனும் வாழ்ந்து வந்தான். பீடப்பணியாளர்களாக ஒன்றி ணைந்தோம். நாடகங்களில் சேர்ந்து நடித்தோம். விளையாட்டுகளில் கூடித்திரிந்தோம். போட்டிகளில் வென்று நின்றோம். அவன் ஒரு திறமை யான ஓவியன், கவிதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள் என பல அவ னது படைப்புக்கள் பலரை கவர்ந்திருக்கிறது. உண்மையாய் சொல்வதா னால் அவன் ஒரு சிறந்த படைப்பாற்றல் மிக்கவன். பாடசாலைக் கல்வி யைத் திறம்படக் கற்பதற்கும், நல்ல பண்புகளை சொல்லிக் கொடுப்பதற் கும் அவது பெற்றோர்கள் எந்தக் குறையும் விட்டதில்லை.

ஆனால், அவனுள் பொதிந்திருந்த பல சிந்தனைகளை , வாழ்வில் அவனின் தனிப்பட்ட விருப்பங்களை அவனது பிற்காலங்களில் நாம் புரிந்து கொள்ளாது போயிருக்கலாம். இடப்பெயர்வுகள் எங்களை வன்னி மட்டும் தூக்கி வீசியதாலும், துறவறத்தின் பாதைத் தெரிவுக்குள் நான் நுழைந்ததாலும் 1995ற்கு பின்னராக அவனைப் பார்க்க வாய்ப்பு கிடைக் கவில்லை. எம்மோடு இருந்தவர்கள், ஊரில் உள்ளவர்கள் பலரைக் காணும் போதும் இடையிடையே அவனைப் பற்றியும் அறிந்து கொள் வேன். இறுதியாக இரண்டு தடவைகள் வவுனியாவில் நான் குருவாக பணி புரிந்த போது என்னைத் தேடி வந்தான். பத்திரிகைத் துறையில் சிறப்பான இதழாசிரியராக கடமை புரிவதை அறிந்து அவனை வாழ்த் தினேன். வீதிகளில் பலதடவைகள் கண்டு சிரிப்பைப் பகிர்ந்து கொண் டேன். யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்காய் அவன் இருந்த போதும் வேதனையில் கண்டுகொண்டேன். தன் துன்பம் மறைத்து பிறர் நலம் விசாரிப்பவன். அவன் எப்போதும் உண்மையாய் வாழ்ந்தவன்.

அவன் தன்னைப் பற்றி பகிர்ந்து கொண்டவைகள் அவ்வளவு இல்

லைதான். ஆனால் அவனை நன்கு புரிந்து கொண்டவர்கள் அவனது உண்மை நிலையினை தெரிந்து கொண்டிருப்பார்கள். வெளிநாடு சென்றது அவசியமானதாக இருக்கலாம். ஆனால் அவசரப்பட்டு விட்டான் என்று தான் என் மனம் சொல்கிறது. விருப்பங்கள் ஏராளம் இருந்தது என்று எத்தனை பேருக்கு தெரியும்? ஏமாற்றங்களின் எண்ணிக்கைகளை யார் தான் கணக்கிட முடியும்? தனது ஓட்டத்தை முடித்துக் கொண்டான் என்று சொல்ல முடியாதுள்ளது. அவன் இன்னும் வாழ்ந்திருந்தால் நிறைய அவனால் பலர் நன்மையடைந்திருப்பார்களே! அவன் விரும்பியவைகள் பலவற்றை செய்திருப்பானே! என்ற சிந்தனை தான் பெருமூச்சாகிறது.

மனித பலவீனங்களில் இறைவனுக்கு முன் தவறுகள் இழைத்திருந்தாலும். சுதர்சன் நித்திய வாழ்வுக்குள் செல்லுவான். இரக்கமுள்ள நல்ல தேவன் அவனைத் தனது அருகில் எப்போதும் மகிழ்ந்திருக்கச் செய்வார். ஏனெனில் அவரில் விசுவாசம் கொண்டவன் எப்போதும் வாழ்வான். எம் மனங்களில் இப்போதும் வாழ்கின்றான்.



# மாதகலின் புகழை உலகெங்கும் உரைத்தவன்

**கனடா மாதகல் நலன்புரி முன்னேற்ற ஒன்றியம்.**

கனடா

பூமியில் மனிதனின் பிறப்பும் இறப்பும் நிகழ் நிரலே. இதில் இறந்த பின்னும் வாழ்பவர்கள் ஒருசிலரே. எம் மாதகல் மண் பெற்ற மகத்தான பல்துறை கலைஞன் அஸ்வின் சுதர்சன் இறந்தும் தன் ஊருக்கு பெருமை சேர்த்து வாழ்கின்றான்.

சிறந்த ஒவியனாக, சிந்தனையாளனாக, கலைஞனாக மற்றும் குறும் பட இயக்குனர் என பல் திறமைகளின் மொத்த உருவமானஅஸ்வின் தான் வாழ்ந்த காலங்களில் எம் மாதகல் மண்ணை இலங்கைக்குள் மட்டுமல்லாது மேற்கத்தய நாடுகளிலும் அடையாளம் காட்டி பெருமை சேர்த்து நின்றவன்.

யுத்த வடுக்களுடன் வடக்கில் மக்கள் மீளெழுந்து கொண்டிருக்கை யில் எம் கலைகளையும் மீளக் கட்டியெழுப்புவோம் என்று கூறிக்கொண்டு எம் மாதகல் மண்ணில் முதல் முதலில் படமாக்கப்பட்ட ஒர் குறும்படம் அஸ்வின் இயக்கத்தில் வெளிவந்தது. அக்குறும் படம் விருது வென்று நின்ற போது எம் ஊரும் பேர் வென்றே நின்றது.

மேலும் நாளேடுகளில் அஸ்வின் வரையும் கேலிச்சித்திரங்கள் உலகெங்கும் இன்றும் பேசப்படுகின்றமை அனைவரும் அறிந்ததே. எம் ஊரின் புலவராம் மயில் வாகனப்புலவரின் 'யாழ்ப்பாண வைபவ மாலையால்' எம் மாதகல் மாதா பெருமை பெற்றது போல் அஸ்வினின் படைப்புக்கள் அனைத்தும் எம் மாதகல் மாதாவுக்கு அணிவிக்கும் மாலையாகவே கருதுகிறோம்.

என்றென்றும் எம் மண்ணின் மைந்தன் அஸ்வின் சுதர்சனின் புகழ் நிலைத்து நிற்கும்.



# மண்ணின் மைந்தனின் மகத்தான அனுபவங்கள்

**யேசுதாசன் அனுஸ்டதாஸ்**
ஆசிரியர்,
யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை.

நெய்தலும் மருதமும் நிறைந்த செழிப்பிலும் ஓர் மாதகல் கிராமத்தில் பிறந்து வளர்ந்து. பல்வேறு துறைகளிலும் பல சாதனைகள் புரிந்து மகத்தான மனிதர் அமரர் அஸ்வின் சுதர்சன். சிறுபராயம் முதல் அவ ரோடு பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. காரணம் அவர் எனது உற வினரும் உற்ற நண்பனுமாக இருந்தவர். மேலும் எனது தம்பிமாருடன் அவரும் ஒருவராக கல்வி கற்று வந்தார்.

ஆரம்பக் கல்வியினை மாதகல் புனித தோமையர் றோ.க.த பாடசாலை யிலும், உயர் கல்வியினை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி யிலும் கற்றார். கல்வி முதல் இணைப்பாடவிதான செயற்பாடுகள் அனைத் திலும் சிறப்பாக செயற்பட்டு வந்த ஒருவன். அவற்றிலும் சிறப்பாக ஓவி யம் வரைவதில் சிறு வயது முதல் தேர்ச்சி பெற்ற ஒருவராக திகழ்ந்து வந் தார்.

பாடசாலைக் காலத்தில் உதைபந்து மற்றும் நாடகம் , வில்லுப்பாட்டு , கவிதைப்போட்டிகளில் பங்குபற்றி பல வெற்றிகளையும் பெற்றுக் கொண் டார். எந்தவொரு பாடசாலை நிகழ்வாக இருந்தாலும் அவரது செயற்பா டுகளை முழுமையாக வெளிப்படுத்தும் மனப்பக்குவம் உடையவர்.

எமது கிராமத்தில் பொது நிகழ்வுகளாக இருக்கலாம், ஆலய விழாக் களாக இருக்கலாம் அனைத்து விடயங்களிலும் அவரது ஒத்துழைப்பு இருப்பதுடன் தனது சிந்தனைக்கு ஏற்ப அழகியற் செயற்பாடுகளை தத் தரூபமாக வரைந்து பலரது பாராட்டினையும் பெற்றவர்.

நாம் அனைவரும் கலைக் குடும்பத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர் கள். அந்த வகையில் எம்மால் ஆற்றுப்படுத்தப்படும் நாடகங்களாக இருக் கலாம் ஏனைய செயற்பாடுகளாக இருக்கலாம் அனைத்திலும் அவரது பங்கு நிறைவாக உண்டு. மேலும் அவரது வளாச்சியின்( கலை ஆர்வ மும் பற்றும்) கண்ணே என் கண்ணே என்ற குறும்படம் ஒன்றினை முதன் முதலில் தயாரித்து எமது கிராமத்திலேயே அதனை உருவாக்கி வெளி யிட்டமை சிறப்பான விடயமாக அமைகிறது. அதனையும் சகோதரர்கள் போல் நாம் அனைவரும் ஒத்துழைத்து அத்தகைய ஓர் படத்தனை உரு வாக்கியுள்ளோம். அதற்கு முழுக் காரண கர்த்தாவாக இருந்தவர் அமரர் அஸ்வின் சுதர்சன் என்பது எமக்கு இன்று ஓர் மதிப்பினைத் தருவதாக அமைகின்றது.

இதிலும் மேலாக பத்திரிகைத் துறையில் அவரது ஈடுபாடு ஓவியத் தின் வழியே உருவானது எனலாம். எமது நாட்டின் சூழலமைவுக்கு ஏற்ற வகையில் தத்தரூபமாக உண்மை எது என்பதினை கார்ட்டூன் வழியாக அனைவருக்கும் வெளிப்படுத்தி வந்தார். பத்திரிகைத் துறையில் மென் மேலும் வளர வேண்டும். என்பதற்காக அதற்கான கல்விகளையும் உரிய முறையில் கற்றும் இன்னும் அத்துறையில் அயராது முயற்சி செய்து முன் வந்த ஊடகவியலாளரில் ஒருவர் தான் இந்த அஸ்வின்.

அஸ்வின் என்ற பெயருடன் குறிப்பிட்ட காலத்தில் பத்திரிகைகளில் அவரது பெயர் வந்து கொண்டே இருக்கும். மக்களுக்கு ஏதோ ஒரு செய்தி யினை சொல்லிக் கொண்டே இருப்பார். இத்தகைய செயலுக்கு உயரிய சிறந்த பத்தி எழுத்தாளருக்கான விருது 2011 இல்க் கிடைக்கபெற்றது.

அஸ்வின் இறுதி வரை நான் பயணித்த ஒருவன் மிகவும் அமை தியானவன். தேவை அறிந்து சேவை செய்யும் மனப்பக்குவம் உடைய வர். தனது பெற்றோர் சகோதரர், சகோதரி மீது மிகவும் பாசமுடையவர். அவரது உடன் பிறவாத சகோதரராக நாம் இருந்தாலும் ஒரே குடும்பமாக


பல்வேறு செயற்பாடுகளையும் முன்னின்று செய்வார்.

ஓர் விபத்தில் அஸ்வின் காயப்பட்டு குறிப்பிட்ட மாத காலம் ஒய்வு எடுத்த வேளை தனது துறை சார் பல ஆக்கங்களை வெளியிட்டுள்ளார். எந்த நேரமும் பயனுள்ள வேலைகளில் மாத்திரம் ஈடுபடுவார். நான் கொழும்பில் நின்ற போது எனக்கு அவரது பிரிவு கேள்விப்பட்டேன். உடனடியாக நான் அவன் தொலைபேசிக்கு அழைப்பினை ஏற்படுத்தி னேன். அது செயலிழந்து இருந்தது. நான் அச் செய்தியினை கேட்டு முழுமையாக நம்பவில்லை. அவரை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்கு உதவிய முகவர்களிடம் கதைத்த போதும் அவர்கள் சரியான எந்தவொரு தகவல்களையும் எமக்குத் தரவில்லை. பெற்றோரும் கொழும்புக்கு வந்து பல நாட்கள் முயற்சியின் பிரகாரம் இந்த சோகச் செய்தி உண்மை என்பது உறுதிப்படுத்தப்பட்டது. 2016ம் ஆண்டு புரட்டாதி மாதம் 22ம் திகதி இறந்த இவரது உடலினை வெளிநாட்டில் வாழும் அவரது தம்பி மற்றும் உறவினர்களது உதவியுடன் 2016 ம் ஆண்டு ஐப்பசி 22ம் திகதி பிறந்த மண்ணாகிய மாதகலுக்கு கொண்டு வந்து நல்லடக்கம் செய்தோம்.

இவரது இழப்பு எம் அனைவருக்கும் எதிர்பாராத ஒன்றாக அமைந்துள் ளது. சாதிக்கப் பிறந்த சரித்திர நாயகன் சாய்ந்து போன செய்தி கேட்டு குடும்பம் முதல் ஊடக சமூகம் யாவும் மிகவும் கவலை அடைந்தது.

கார்ட்டூன் அஸ்வினை நாம் இனி எங்கு காணுவோம். என பல உள் ளங்கள் ஏங்கின அஸ்வின் இருப்பினும் இறைவனது நியதி இதுவெனில் நாம் என்ன கூறினும் எப்பயனும் இல்லையே.

“உற்ற நல் நண்பன் உலகிற்கு செய்த
உயர்வான பணிகள் ஏராளம்
அது இன்று அனைவரும் அறிந்ததுவே
இன்னும் இருந்திருந்தால் ஏற்றம் பல
கண்டிருப்பான் இறைவன் அதனை ஏற்கவில்லையோ
என்றும் இவர் ஆன்மா இறை சன்னிதியில்
இளைப்பாற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்



# ஆற்றல் மிக்க ஊடகவியலாளன்- அவசரமாய் எம்மைப் பிரிந்தவன்.

**செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன்**
பிரதி முதல்வர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

ஊடகம் சனனாயகத்தின் நான்காவது தூண் என மட்டிடுவர். இக் கூற்றின் மெய்மைத் தன்மை பிரதானமாக ஊடகவியலாளரின் செயற் பாடுகளிலேயே தங்கியுள்ளது. அண்மையில் எம்மைவிட்டுப் பிரிந்த அஸ்வின் துணிச்சல் மிக்க ஊடகவியலாளராகத் தன்னை பல இடங்க ளில் அடையாளப்படுத்தியிருக்கின்றார். அஸ்வினை அறிந்தோர் அதனை அறிவர்.

ஊடகவியலாளர் ந.வித்தியாதரனின் பாசறையில் வளர்ந்தவர் அவர். எழுத்தாற்றலுக்குச் சமதையாக கருத்துச் சித்திரம் வரையும் ஆற்றலும் அஸ்வினுக்குக் கூடியிருக்கிறது. இதனால் இலங்கை பத்திரிகையாளர் சம்மேளனத்தால் வழங்கப்படுகின்ற சிறந்த ஊடகவியலாளருக்கான விருதையும் அவர் பெற்றுக் கொண்டார்.

அஸ்வினுக்கும் எனக்கும் இடையிலான நட்பு வலுவடைவதற்கு யாழோசை என்ற பெயரில் வீரகேசரி நிறுவனத்தால் வெளியிடப்பட்ட பத்திரிகையே காரணமாக அமைந்தது. கல்வித்துறையைச் சார்ந்தவ ராக கல்வியற் கல்லூரியில் சில காலங்கள் கற்ற அனுபவம் பெற்றவ

ராக அஸ்வின் இருந்தமையால் என்மீது தனியான ஒர் மதிப்பை வெளிப் படுத்தினார் என்றே சொல்ல வேண்டும்.

தனது உள்ளத்தில் பட்டதை யாருக்கும் அஞ்சாமல் வெளிப்படையாகத் தெரிவிக்கும் பண்பு அவருக்குத் தனித்துவமானது. இது அவரது பலமாக வும் அதே வேளை பலவீனமாகவும் அமைந்திருந்தது எனக் கருதுகின் றேன். அவரது திறமைக்குரிய மிகச் சரியான களத்தை அவர் தக்கவைப் பதற்கான அவரது எத்தனங்களில் ஏற்பட்ட பின்னடைவுகளுக்கு இதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம் என்பது எனது கணிப்பு. ஆக்கங்கள் பெறுவதற்காக அவர் என்னிடம் அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொள்வார். இதன் போது தனது கனவுகள் வேட்கைகள் தொடர்பாகவும் என்னுடன் பகிர்ந்து கொள்வார். கல்வித்துறையில் ஒர் ஆசிரியராகிவிட வேண்டும் என்ற எண்ணம் அதனுள் புதைந்திருந்தது. வாழ்க்கையில் சிகரங்களைத் தொட வேண்டும் என அடிக்கடி பேசிக் கொள்வார்.

வாழ்க்கை என்பது ஒரு பிறிட்ஜ் விளையாட்டு என பேராசிரியர் இரா தாகிருஷ்ணன் குறிப்பிடுகின்றார். விளையாட்டுக்குரிய அட்டைகள் இறைவனால் வழங்கப்படுகின்றன. விளையாடுவது எங்கள் கைகளிலே தான் இருக்கின்றது. அத்தகைய ஒரு எத்தனத்தில் தன்னைப் பணயம் வைத்து உயர முனைந்தவர் அஸ்வின். விதி யாரைத்தான் விட்டது? இத் தனை விரைவாக அவரது இழப்பு நேரும் என நான் கனவிலும் நினைத் திருக்கவில்லை. நண்பர் வே. தபேந்திரன் அஸ்வினின் துயரச் செய்தியை என்னுடன் பகிர்ந்து கொண்ட போது நான் நம்ப மறுத்தேன். ஆனால் இன்று நம்பித்தான் ஆகவேண்டியிருக்கின்றது.

அஸ்வினின் ஆன்மா நித்திய இளைப்பாறுகை பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



# மறக்கவோ, மறைக்கவோ முடியாத நினைவுகள்

**சித்தன்கேணியூர் செல்வரத்தினம் சௌந்தரராசன்**
General Manager, Kasho Garments (PVT) LTD

தமிழ் பிரதேச மாணவ, ஆசிரிய சமுதாயத்தினால் அன்புடனும், பேரா தரவுடனும் நேசிக்கப்பட்டு வாசகர் மத்தியில் பிரபல்யமாக திகழ்ந்தவர் அமரர் அஸ்வின் சுதர்சன் அவர்கள். ஐந்தாம் தர புலமைப்பரிசில் வினா விடைகளை ஜீனியஸ் மற்றும் யாழ் ஒசை பத்திரிகைகளில் பிரசுரித்து மாணவ சமுதாயத்தின் உயர்வக்காக பாடுபட்ட ஒரு பெருந்தகை.

யாழ் வீரகேசரி காரியாலயத்தின் உதவி ஆசிரியராக பணியாற்றிய போது பிராந்திய முகாமையாளரான என்னுடன் இணைந்து யாழ் ஒசை பிரசுரத்தின் வளர்ச்சிக்காக அரும் பாடுபட்டவர். ஆசிரிய பீடமும் நிர்வாக மும் இணைந்து செயற்படும் போது பத்திரிகை விற்பனை உயரும் என் பதை நாம் நிரூபித்துக் காட்டக்கூடியதாக இருந்தது.

நீதிக்கும், நேர்மைக்கும் தன்னை அர்ப்பணித்து செயற்பட்ட அமரர் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை ஒதுக்கி பொதுநலனுக்காகவே செயற் பட்டார். இதனால் அவர் குரோதங்களை சந்தித்த போதும் அவற்றை பொருட் படுத்தவில்லை. துணிவாக போராடி நீதியை நிலை நாட்டும் பக்குவம் அவ ரிடம் இருந்தது.

அமரர் அஸ்வின் ஒரு சிறந்த எழுத்தாளராக மிளிர்ந்தார். அவரின் எழுத்துக்களை வாசகர்கள் ஆவணத்துடன் எதிர்பார்த்து இருந்தார்கள். இதுவும் யாழ் ஓசையின் வளர்ச்சிக்கு ஒரு காரணமாக அமைந்தது. அவரின் மறைவு எழுத்தாளர், பத்திரிகையாளர் மத்தியில் ஒரு இடைவெளியை ஏற்படுத்தியது.

குடும்ப பொருளாதார மேம்பாட்டிற்காக வெளிநாடு செல்ல என்னிடம் பிரியாவிடை பெற்றபோது அது ஒரு நிரந்தரமான பிரியாவிடையாக அமையும் என்று நான் ஒருபோதும் நினைத்ததில்லை.

சிறந்த பத்தி எழுத்தாளராக கொழும்பு பத்திரிகையாளர் சங்கத்தினால் கௌரவிக்கப்பட்ட போது, அதே கௌரவம் எமது யாழ் கிளைக்கு கிடைக்கப்பெற்ற ஒரு சிறப்பாக அமைந்தது. இதனையொட்டி யாழ்ப்பாணத்தில் வரவேற்பு உபசாரம் ஒன்றை நாம் ஏற்பாடு செய்திருந்தோம். அந்த நினைவுப் பிரதிபலிப்பும் இத்துடன் பதியப்படுகின்றது.

அமரர் அஸ்வினின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக!



# ஊடகப் போராளியாகவே வாழ்ந்து மறைந்த அஸ்வின்

**எஸ்.ரி.குமரன்**
சுயாதீன ஊடகவியலாளர்

அஸ்வின் மிகச் சிறந்த ஊடகவியலாளன், சித்திரக்கலைஞன், நாடக ஆர்வலன், அரசியல் விமர்சகன், கலைஇரசிகன், சினிமாவிமர்சகன், சமூக பல்பரிமாண தேடல் கொண்ட சமூகவியல்வாதி, நல்ஆலோசகன், குறைகளைகண்டு நேரே சுட்டுபவன், நல்ல விடயங்களுக்கு ஊக்கம் தந்து தொடர்ந்து இயங்க வழிகாட்டுபவன், பொது விடயத்தில் அக்கறை கொண்டவன், கேலிச்சித்திரக்கலைஞன் என்ற பல்வேறு பரிமாணத் தளத்தினை கொண்ட ஒரு அற்புத மனிதன்.

அஸ்வின் சுதர்சனை நான் வீரகேசரிப்பத்திரிகையின் யாழ் காரியாலயத்தில் முதன் முதல் சந்தித்தேன். முதல் சந்திப்பிலேயே ஓர் ஈர்ப்பு என்னைத் தொற்றிக் கொண்டது. நான் வீரகேசரி தேசியப் பத்திரிகையின் பிராந்திய செய்தியாளராக பணியாற்றிக் கொண்டிருந்தேன். விரகேசரி பத்திரிகையின் யாழ் பிராந்திய அலுவலகத்தில் உதவி ஆசிரியராக இணைந்து கொண்ட அஸ்வினுக்கும் எனக்கும் புரிதலுடன் கூடிய நட்பு ஏற்பட்டது.

ஆரம்பத்தில் செய்தியிடலுக்காக தொடர்பினை வைத்திருந்த எங்கள்

உறவு படிப்படியாக சமூக அக்கறை , அரசியல் , கலை , புதிய தேடல்கள் சார்ந்து பரந்த விசாலமாக எங்கள் இருவருக்கும் இடையிலான செயல் இயக்கம் நகர்ந்து சென்றது.

இதன் வெளிப்பாடாக வீரகேசரி சங்கமம் பகுதிக்கு கலை சார்ந்த விடயங்களினை எழுதுவதற்கான தொடர்பாடலினையும் ஊக்கத்தி னையும் அஸ்வின் எனக்கு ஏற்படுத்தித் தந்தான். அவ்வாறே வீரகேசரி நாளிதழிலும் எனது படைப்புகள் வெளியில் உலா வரத் தொடங்கியது. 2010 களில் வீரகேசரியின் யாழ்ஓசைப்பதிப்பு ஒவ்வொரு வெள்ளிக்கி மை களிலும் வெளிவரத் தொடங்கியது. அதன் காத்திரம் மிக்க உருவாக் கதிலும் அதனை வளர்த்தெடுப்பதிலும் தன்னை மறந்து அர்ப்பணிப் புடன் பணியாற்றியவர். யாழ் ஓசை வார வெளியீட்டில் எழுதுவதற்கு எனக்கு ஊக்கம் தந்தவன்.

யாழ் ஓசையூடாக பல எழுத்தாளர்களினை அறிமுகம் செய்துள்ளான் அஸ்வின். இதற்கு அவனிடம் இருந்த தேடல் தான் வழிவகுத்தது என லாம். எமது சமூகத்திற்கு தேவையானவற்றையும் அவற்றினை எழுத வல்ல, படைக்கவல்ல படைப்பாளிகளுக்கு தான் பணியாற்றும் பத்தி ரிகைத் தளத்தினூடக சந்தர்ப்பத்தினை வழங்கி பலரின் வளர்ச்சிக்கு ஏணிப்படியாக விளங்கியுள்ளான்.

இன்று உள்ள இளம் எழுத்தாளர்களின் வளர்ச்சியிலும் அஸ்வினின் பங்கு அளப்பரியது. சமூக நோக்கு பார்வை, தூர நோக்கு பார்வை, சமூ கத்தின் தேவை என்பனவற்றை உணர்ந்து பலரை எழுதத் தூண்டிய தூண்டியாக விளங்கினான்.

யாழோசையில் பத்தி எழுத்து, விமர்சனக்கட்டுரைகள், நேர்காணல் கள், கலை நிகழ்வுகளின் தொகுப்பு, அரசியல் விடயங்கள் என்பவற் றினை எழுதுவதற்க்கு எனக்கு ஊக்கம் தந்தவன் அஸ்வின்.

ஊடகத் துறை மீது தான் சாதிக்க வேண்டும் என்ற விடயம் காரண மாக கடுமையாகவும் நேர்மையாகவும் அர்ப்பணிப்புடனும் பணியாற்

றியவர் அஸ்வின். எமது சமூகத்திற்கு சரியான விடயத்தினை மட்டுமே கொடுக்க வேண்டும், சரியான அரசியல் விடயத்தினையும் அரசியல் தெளிவினையும் மக்களிடத்தில் ஏற்படுத்த வேண்டும் என்பது அவ னிடத்தில் காணப்பட்ட பேராவாவாக இருந்தது. இவ் விடயங்களினை உரையாடும் போது மன வேதனையுடனும் எமது சமூகத்தின் அக்கறை யுடனும் என்னுடன் கலந்துரையாடுவான். இத் தளத்தில் நின்று கொண்டு இயங்குதலில் பல படைப்புக்களினை ஊடகப் போராளியாக வெளிக் கொணர்ந்தான்.

சரியான அரசியல் சமூக விழிப்புணர்வினை மக்களிடத்திலே ஏற்ப் படுத்த வேண்டும் என்ற அடி மனதின் வெளிப்பாடாகவே அவனது கேலிச்சித்திர ஊடக பயணத்தின் ஆரம்பம் அமைந்தது எனலாம். இதற்கு தினக்குரல்பத்திரிகை களம் அமைத்துக் கொடுத்தது கவனிக்கத்தக்க விடயமாகும்.

அனைத்து ஊடகவியலாளர்களுடனும் பேதமின்றி நட்புறவுடன் உறவாடுவதுடன் தனக்குத் தெரியாத விடயத்தினை கேட்டு அறிந்து கொள்கின்ற உயர் பண்பும் அவனிடத்தில் காணப்பட்டது. இதன் விளை வாகவே ஊடகத்துறையின் சாதிப்புக்காகவும் தேடலுக்காகவும் சிறந்த திறன் வெளிப்பாட்டிற்காகவும் சிறந்த ஊடகவியலாளனுக்கான தேசிய விருதினை 2011 இல் பெற்றுக் கொண்டார்.

தன் இறுதி மூச்சு வரை சமூக அக்கறையுடனும் உளத்திடத்துடனும் ஊடகப் போராளியாகவே வாழ்ந்து மரணித்துள்ளான் அஸ்வின். வையத் துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்ற வள்ளுவர் வாக்கிற்கு அமைய அஸ்வினின் ஊடகப் பணி அவன் மறைந்து சென்றாலும் ஊடக உலகினுள் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கும். என்பது நிதர்சனம். அஸ்வின் விட்டுச் சென்ற இடம் என்றுமே நிரப்ப முடியாத இடமாகவே காணப்படுகின்றது. அஸ்வின் விட்டுச் சென்ற இடத்தில் இருந்து பணியினை தொடர வேண்டியது நம் அனைவரதும் சமூகக் கடப்பாடாகும்.



# திறமைசாலிகளை உயர்த்திய ஏணி

**எஸ்.ரி.அருள்குமரன்**
ஆசிரியர், யாழ் மத்திய கல்லூரி

காலச்சக்கரத்தின் சுழற்ச்சிக்குள் மனிதர்கள் பிறப்பதும் இறப்பதும் இயற்கை.அவ் இயற்கையின் சட்டகத்தினுள் வாழ்ந்து மனிதர்களது மனங்களில் வாழ்பவர்களையே காலம் மனிதர்களாகக் கொண்டாடும்.

பலருடன் நாம் பழகவாய்ப்புக்கிடைத்ததாலும் சிலருடனான நட்பும், உறவும், அவர்கள் எம்மீது காட்டும் பாசமும் நாம் அவர்கள் மீது காட்டு கின்ற உரிமையும் மறக்கவியலாததாகும்.

அத்தகைய பின்புலத்தில் பயணித்தவராக அருமைச் சகோதரர் அமரர் அஸ்வின் சுதர்சன் அண்ணன் காணப்படுகின்றார்.

எளிமை, தன்னடக்கம், தன்னை சுற்றியுள்ளவர்களினை நேசிக் கின்ற மனப்பாங்கும்அவர்களை உயர்த்திவிடவேண்டும் என நினைக் கின்ற மனமும் அவரிடம் காணப்பட்டது. அதனால் அவரை நேசித்தவர் கள் பலர்.

துடிப்பும்,வேகமும், எதையும் சாதிக்கவேண்டும் என்கின்ற வகையில் துணிவும் விடாமுயற்சியும் அவரது பலங்களாகக் காணப்பட்டன. இவை

அவரைப் பின்தொடர்ந்து வருகின்றவர்களிற்கு உத்வேகத்தை தருவன வாகவும், நம்பிக்கை தருவனவாகவும் இருந்தன.

சுயநலமும் மற்றவரது வளர்சிகண்டு பொறாமை கொண்டு வீழ்த்தி விட வேண்டும் என நினைக்கின்ற மனிதர்கள் வாழ்கின்ற சூழலில் மற்றவர்களையும் வாழ்த்தி அவர்கள் எத்துறையில் இயங்குகின் றார்களோ அத்துறையில் அவர்களிற்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொடுப்பதற்காக தன்னலம் பாராது செயற்ப்பட்டவர்.

ஊடகவியலாளனாகவும், கேலிச்சித்திரங்களை வரைபவராகவும், குறும்படத்துறை என பல் துறையில் தன்னை அடையாளப்படுத்திய இவர் சமூகத்திற்கு தனது ஆக்கவியல் சிந்தனையின் மூலம் பல செய்திகளைவெளிப்படுத்தியதுடன்மாற்றங்களைக்கொண்டுவந்தவர்.

ஈழத்தில் வளர்ந்து வருகின்ற குறும்படத்துறையினை வளர்க்கும் நோக்கில் யாழ்ஓசையில் வெளிவந்த ஒளிக்கீற்று பகுதியில் பல குறும் படத்துறை சாந்தவர்களது அங்கீகாரத்திற்கு ஏற்றவகையில் அப்பகுதி யினை வடிவமைத்திருந்தார்.

மிகச்சிறிய வயதில் காத்திரமான வகிபங்கினை ஏற்ப்படுத்தி சமூகத் தின் அசையவிக்கத்தில் அதிர்வுகளை ஏற்படுத்தியவர்.

சகோதரர் எஸ்.ரி.குமரன் மூலம் ஏற்ப்பட்ட இவரது நட்பு எமது வளர் சியில் குறிப்பிட்ட மாற்றங்களைக் கொண்டு வந்தது.

சுதர்சன் அண்ணா யாழ்.ஓசையில் ஆசிரியராக கடமையாற்றிய வேளையில் எனது பல கட்டுரைகளினை பிரசுரித்து ஊக்குவித்திருந் தார். அவரது ஊக்குவிப்பு நாமும் எழுத்து துறையில் பயணிப்பதற்கும் அவரது வழிகாட்டலில் வளர்ச்சியடைவதற்கும் களமாகின.

வித்தியாசமாகவும், புதிய கண்ணோட்டதில் எதையும் அணுகுகின்ற அவரதுமனோபாவம் இவருக்கான அடையாளங்களை ஏற்படுத்திகொடுத்

தது. சான்றாக இவர் யாழ்.ஒசையில் எழுதிய கேட்டியளோ சங்கதி பத்தி எழுத்திற்கு கிடைத்த விருதினைக் குறிப்பிடலாம்.


காலம் படைப்பாளிகளினையும் நல்ல சிருஸ்டிகர்த்தாக்களினை விரைவாக தன்னுடன் இணைத்துக்கொள்கின்ற அவலநிலை காணப் படகின்றது. அந்தவகையில் இவரையும் தன்னுடன் விரைவாக இணைந்த அவரை சுற்றியிருந்தவர்கள், அவர் நேசித்தவர்கள், அவரை நேசித்த வர்களிற்கு தாங்கொணாத்துயரினை ஏற்படுத்தியிருக்கின்றது.

மிகப்பெரிய ஆளுமை மிகச்சிறிய வயதில்எமை விட்டுப் பிரிந்து சென் றமையினை ஏற்க மனம் மறுக்கின்றது.

பிறப்புண்டேல் இறப்புண்டு எனும் இயற்கையின் சட்டகத்திற்குள் நின்று எம்மை நாமே தேற்றிக்கொள்வதை விட வேறு வழியில்லை. அவர் மேற்கொண்ட செயற்ப்பாடுகளும் ஏற்படுத்திய மாற்றங்களும் காலத் தால் போற்றப்படும்.

இந்தப் பூமிப்பந்தில் அவரை நேசித்தவர்களின் மனங்களிலும் அவ ரால் ஆக்கப்பட்ட படைப்புக்ளிலும் அவர் என்றும் வாழ்ந்துகொண்டி ருப்பார்.

அவர் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.



# பன்முக ஆளுமை கொண்ட ஊடகப் போராளி அஸ்வின்

**வி.கவிச்செல்வன்**

(அல்வாய்)

1995ம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் யாழ் குடாநாட்டில் ஏற்பட்டஇடப்பெயர்வின் காரணமாக எனது குடும்பத்துடன் இடம் பெயர்ந்து புதுக்குடியிருப்பில் வசித்து வந்த வேளை, அங்கு இயங்கி வந்த பாடசாலையான முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் க.பொ.த (சா/த) படிப்பிற்காக இணைந்த போது எங்களுடன் இணைந்து கொண்டவன் தான் நண்பன் அஸ்வின் சுதர்சன்.

பள்ளிக்காலத்து நினைவுகள் என்றும் பசுமையானவை. அந்நினைவுகள் வாழ்நாள் முழுவதும் மறக்கமுடியாதவை. எங்கள் நண்பர்களுடன் சுதர்சன் தனித்துவமிக்கவனாக விளங்கினான். பாடசாலையில் நடைபெறுகின்ற கலைநிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகள், தமிழ்த் தினப் போட்டிகள் எதுவாயினும் அவனது பங்களிப்பு கட்டாயம் இருக்கும். குறிப்பாக அவனது ஒவியத் திறமை தான் அவனை எல்லோரும் திரும்பிப் பார்க்க வைத்தது. பாடசாலை நிகழ்வுகளிற்கு படம் வரைதல், பதாகைகள் எழுதுதல், விழா அலங்கரிப்பு என பல்வேறுபட்ட வேலைகளையும் தானே பொறுப்பெடுத்து செய்திடுவான். அவன் எம்முடன் இணைந்து கவியரங்கம், பட்டிமன்றம், நாடகம் என்பவற்றில் பங்குபற்றி

பலரது பாராட்டையும் பெற்றான். அதே வேளை வானொலி நிகழ்வொன் றிலும் பங்குபற்றி பாராட்டினைப் பெற்றான். அதே காலங்களில் பாட சாலை மைதானத்திலே அவனுடன் சேர்ந்து உதைபந்து விளையாடிய தையும், 21 வயதுக்குட்பட்ட பாடசாலை அணியில் போட்டிகளில் பங்கு பற்றியதும் என்றும் மறக்க முடியாதவை.

க.பொ.த (உ/த) இல் கலைப்பிரிவை தெரிவு செய்த நண்பன் ரீயூசன் கல்வியினை இரணைப்பாலை "அறிவொளி" கல்வி நிலையத்திலும் புதுக்குடியிருப்பு "ஒஸ்கா" கல்வி நிலையத்திலும் தொடர்ந்தான். அங்கு கற்பித்த ஆசிரியர்களான ருசியந்தன்(அளவையியல்) இரா. குமரகுரு (தமிழ்) மற்றும் ஒஸ்கா கல்வி நிலைய நிர்வாகி வசந்தி அக்கா ஆகி யோரது விருப்பத்துக்குரிய மாணவனாகவும் இருந்தான். அக்காலப்ப குதியில் ஒஸ்கா கல்வி நிலையத்தின் ஆசிரியராகவும் இருந்தான்.

1998ஆம் ஆண்டு முல்லைத்தீவு மகா வித்தியாலயம் மீண்டும் தனது சொந்த இடத்தில் மீள ஆரம்பித்த போது சுதர்சன் தனது கல்வியை மு/ இரணைப்பாலை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் தொடர்ந்தான். இக்காலப்பகுதியில் புதுக்குடியிருப்பு பரன் தட்டெழுத்து ,சுருக்கெழுத்து நிலையத்தின் உரிமையாளர் அ.ஸ்ரனிஸ்லாஸ் (சின்னண்ணா) அவர்க ளின் நெறியாள்கையில் உருவான சமூக நாடகம் ஒன்றில் நானும், சுதர் சனும் இணைந்து நடித்து பாராட்டினையும் பெற்றோம்.

ஆனந்தபுரத்தில் நண்பனின் வீடு இருந்தமையால் அவனின் வீட் டிற்கு அடிக்கடி சென்று வருவதுண்டு. அந்நேரங்களில் அங்குள்ள புனித செபஸ்தியர் ஆலய முற்றலில் கிளித்தட்டு ஆடியதும் என்றும் மறக்க முடியாதது. மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்டமையால் "மாதகல் மைந் தன்" என செல்லப் பெயர் கொண்டு அழைப்போம். அவனுடன் எனக்கி ருந்த நட்பு குடும்ப நட்பாக மாறியதன் காரணமாக எம் வீட்டின் சகல இன்ப, துன்ப நிகழ்வகளிலும் பங்கு கொள்வான்.

தனது உயர்தர பரீட்சையின் பின்னர் ஆனந்தபுரம் அ.த.க பாடசாலை யிலும், புதுக்குடியிருப்பில் இயங்கி வந்த கொக்கிளாய் அ.த.க பாடசாலை

யிலும் சித்திரம், கிறிஸ்தவம், வரலாறு போன்ற பாடங்களைக் கற்பித் தான். இக் காலகட்டத்தில் அங்கு வெளியான ஈழநாடு, ஈழநாதம், வெளிச் சம் சஞ்சிகைகளிலும் தனது ஆக்கங்களை பதிவு செய்ய தொடங்கி னான். அவ் வேளையில் அதனைப் பார்த்த "இணுவையூர் சிதம்பர திருச்செந்தூர் நாதன்" என்கின்ற பத்திரிகை ஆசிரியர் தான் அவனைப் பத்திரிகைத்துறையில் தொடர்ந்தும் கால்பதிப்பதற்கு களம் அமைத்துக் கொடுத்தார். ஏற்கனவே அவன் ஓவியம் வரைவதில் அனுபவத்தைப் பெற்றிருந்தமையால் "காட்டூன் பட வரை கலையினை" தெரிவு செய்து பத்திரிகைத் துறையில் தடம்பதித்தான்.

யுத்த காலப்பகுதியான அக்காலகட்டத்தில் காலத்தின் பிரதிபலிப்பா கவும், தேவையாகவும் இவனது கார்ட்டூன் படங்களும் இருந்தமையி னால் இவனது படைப்புக்கள் பரவலாக பேசப்பட்டது. அக்காலகட்டத்தில் நண்பன் திருமண பந்தத்தில் இணைந்து "லோஜனா" எனும் செல்லக் குழந்தையைப் பெற்றெடுத்து நல்லதொரு குடும்பத்தலைவனாகவும் திகழ்ந் தான். இயல்பாகவே எல்லோருடனும் பழகுகின்ற பண்பும், மதிக்கின்ற குணங்களும் இருந்தமையால் ஆனந்தபுரத்தில் சமூகத்திற்கு ஒரு முன் மாதிரியாக பல நற் செயல்களில் ஈடுபட்டு வந்தான். ஆனந்தபுரத்தில் கிறிஸ் தவ இளைஞர் மன்றத்தின் செயலாளராகவும், மறையாசிரியராகவும் இருந்து சமூகப்பணியாற்றினார்.

2002ம் ஆண்டு யாழ் தேசிய கல்வியியல் கல்லூரியில் சித்திரப் பாடத்திற் கான ஆசிரிய பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டு கற்றுக்கொண்டிருந்த வேளையில் வெளிநாடு செல்வதற்கான சந்தர்ப்பம் ஏற்பட சவுதி அரேபி யாவிற்கு சென்றான். 4 வருடங்களாக வெளிநாட்டில் பணிபுரிந்த வேளை தொலைபேசி மூலமாகவும் என்னுடன் தொடர்பை ஏற்படுத்தி தனது குடும் பத்தாரின் நலன்களையும் நாட்டு நடப்புகளையும் பற்றியும் அறிந்து கொள் வான். 2008 ம் ஆண்டு மீளவும் தனது சொந்த இடமான மாதகலிற்கு வருகை தந்து "சுடர் ஒளி" பத்திரிகையின் உதவி ஆசிரியராகவும் 2010 இல் இருந்து 2015 வரை "வீரகேசரி" பத்திரிகையின் உதவி ஆசிரியராகவும் பணிபுரிந்தான். இக் காலகட்டத்தில் பத்திரிகை உலகத்தின் பார்வை இவன்

மேல் ஆழமாகப் பதிந்தது. கார்ட்டூன் படவரைகலையில் தனக்கென ஒரு இடத்தை தக்க வைத்த சுதர்சன் "பத்தி எழுத்து" எனும் பகுதியிலும் சிறந்து விளங்கினான். யாழோசை பத்திரிகையில் பணிபுரிந்த வேளையில் "இவரைப் பற்றி 25" எனும் தலைப்பின் கீழ் சமூகத்தின் பெரியோர்களினதும் முன்னோடிகளினதும் வரலாறுகளை சுவைப்பட பதிவு செய்து வந்தான். அத்துடன் குறுக்கெழுத்து பகுதியினையும் பதிவு செய்து வந்தான். குறுக்கெழுத்து பகுதியினையும் தானே பொறுப்பெடுத்து செய்து வந்தான்.

இதே காலப்பகுதியில் பல கவிதைப் போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களையும் பெற்றான். அதுமட்டுமன்றி தன்னை ஒரு இயக்குனராகவும் இனங்காட்டினான். 2012 ம் ஆண்டு காதலை மையமாகக் கொண்ட "கண்ணே என் கண்ணே" என்ற குறும்படத்தினையும் இந்திய இலங்கை மீனவர் பிரச்சினைக்கு தீர்வு எப்போது என்ற தகவல் கலந்த குறுந்திரைப்படத்தையும் இயக்கினான். இதில் ஒரு திரைப்படப் போட்டிக்காக எடுக்கப்பட்ட" கண்ணே என் கண்ணே" என்ற குறுந்திரைப்படத்தின் கதாநாயகிக்கு விருது கிடைத்தமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். 2015-2016 வரையிலான காலப்பகுதியில் "தினக்குரல் பத்திரிகையில் "காட்டூனிஸ்ட்" ஆக பதவி ஏற்றான். அக்காலப்பகுதியில் மிகவும் சூடுபிடித்து பேசப்பட்ட பல விடயங்களை தனது காட்டூன் படம் மூலமாக உலகத்திற்கு வெளிக்கொணர்ந்தான்.

செய்திகள், கட்டுரைகள் மூலமாக சொல்ல வந்த விடயங்களை தனது படத்தின் மூலம் புரியவைத்தான். தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் அரசியல் நிலைப்பாடுகளையும் வெளிக்கொண்டு வர பத்திரிகை சிறந்த ஊடகம் என்றும் இது தமிழ் மக்களை நேர்வழியில் கொண்டு செல்வதற்கு வழிவகுக்கும் என்றும் 2.8.2016 "நேத்ரா T.V" இன் உதய தர்சனம் நிகழ்ச்சியில் தனது செவ்வியில் தெரிவித்தான். தனது கார்ட்டூன் படங்கள் மூலம் பல அசௌகரியங்களையும் எதிர்கொண்டதாகவும் அவன் என்னிடம் கூறியிருந்தான்.

அஸ்வினின் "பத்தி" எழுத்துப் பகுதிக்காக பத்திரிகை ஆசிரியர் அமைப்


பினால் "சிறந்த பத்தி எழுத்தாளர்" விருது 2011 ஆண்டு வழங்கப்பட்டது. இது அவனுடைய முதல் விருதாகும். அத்தோடு சர்வதேச ஊடகவி யலாளர் ஒன்றியத்தினர் நெருக்கடியான சூழலில் ஊடகப் பணியினை அர்ப்பணிப்புடன் செய்தமைக்காக "சிறந்த ஊடகவியலாளன் விருது" தராகி சிவராம் நினைவாக 2017 இல் வழங்கினர். இவ்விருதினை நண்பனின் பெற்றோரே பெற்றுக் கொண்டனர். அதே வேளை சமூக வலைத்தளங்களில் ஒன்றான முகப்புத்தகத்திலும் தனது படைப்புக்களை பதிவேற்றம் செய்து பல நண்பர்களையும் சேர்த்துக் கொண்டான்.

தனது குடும்பத்தின் மேல் அக்கறை கொண்ட நண்பன் தனது சகோத ரிக்கு நல்ல இடத்தில் திருமணம் செய்து வைத்தது மட்டுமன்றி தனது சகோ தரன் அஸ்வின் சுகிர்தனையும் வீரகேசரியில் சேர்ப்பித்தான். 2015ம் ஆண்டு நடைபெற்ற எனது திருமணத்திற்கு தனது பலத்த வேலைப் பழு வின் மத்தியிலும் கூட கொழும்பில் இருந்து வருகை தந்தமை என்றும் என் வாழ்வில் மறக்கமுடியாத விடயமாகும். வவுனியா இறம்பைக குளம் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் கல்வி கற்று வரும் தனது மகளைப் பார்ப்பதற்காக சென்று வருவதுண்டு. சிலவேளைகளில் மகளைப் பார்ப் பதற்கான சந்தர்ப்பம் கிடைக்காமல் திரும்பி வந்ததாகவும் சொல்லி என்னிடம் கவலைப்படுவதுண்டு. தான் வெளிநாடு போவதற்கு தேவை உள்ளதாகவும் அதற்கான காரணத்தை வெளிநாடு சென்றடைந்தவுடன் கூறுவதாகவும் எனக்கு கூறியிருந்தான். சில நாட்களாக நண்பன் சுதர் சனின் தொடர்பு எனக்கு கிடைக்கவில்லை. அதன் பின் ஒரு நாள் காலை வேளையில் முகப்புத்தகத்தில் அந்த பேரதிர்ச்சிகரமான செய்தியினை நம்ப முடியாமல் கொழும்பில் உள்ள அவனது தலைமைக் காரியால யத்தில் வேலை பார்க்கும் ஒருவருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது அச் செய்தியினை முழுதாக உறுதிப்படுத்த முடியாதிருப்பதாக கூறினார். அக்கணமே மாதகலில் உள்ள சுதர்சனின் வீட்டிற்கு சென்றேன். அங்கு சென்ற போது எமது நண்பன் தொலைதூரம் போன செய்தியினை அறிந்து மனம் கலங்கி நின்றேன்.

நண்பனின் புகழுடல் உக்ரைன் நாட்டில் இருந்து அவனது வீட்டிற்கு

கொண்டு வருவதற்கான ஏற்பாடுள் நடைபெற்று வருவதாக உறவி னர்கள் தெரிவித்தனர். பலத்த சிரமத்தின்மத்தியில் அவனது உடல 2016-10-22 அன்று (ஒரு மாதத்தின் பின்) கொண்டுவரப்பட்டது. எனது தாயாருடன் வீட்டிற்கு சென்ற போது திகைப்படைந்தேன். ஒன்றாக படித்து, கைபிடித்து, தோள்மேல்கைபோட்டு , ஓடி விளையாடி , அன்புடன் பழகிய ஆளுமை கொண்ட நண்பனை மூடி மறைக்கப்பட்ட பெட்டிக்குள் ஒரு சிறிய கண்ணாடி வழியூடாக பார்த்த பொழுது நான் யாரை நோவது என்று தெரியாமல் கடவுளைத் தான் கடிந்து கொண்டேன். திருப்பலிப் பூசைக்காக புனித செபஸ்ரியர் தேவாலயத்தில் வைக்கப்பட்டு புகழுடல் நல்லடக்கத்திற்காக மாதகல் சேமக்காலைக்கு கொண்டு செல்லப்பட்டது. அவ் வேளையில் நண்பனைப் பற்றி ஒரு சில வார்த்தையேனும் சொல்ல வேண்டுமென்ற என் மன ஆதங்கம் சிறிய அஞ்சலியுரையினை செய்த தன் மூலம் ஓரளவு மன ஆறுதலடைந்தேன்.

அன்பு நண்பன், மாதகல் மைந்தன், அஸ்வின் சுதர்சன் பன்முக ஆளுமை கொண்ட துணிவு கொண்ட ஒரு ஊடகப்போராளியாக எங்களில் ஒரு வனாக வாழ்ந்து வருகின்றான். கார்ட்டூன் வரைகலைக்கு வளர்ந்து வரும் இளம் பத்திரிகையாளரிற்கு ஓர் முன்னோடியாக பிரகாசித்த எம் நண்பனின் இழப்பு, குடும்ப, உறவினர்களுக்கு மட்டுமன்றி ஊடகத்து றைக்கம் நண்பர்களாகிய எங்களுக்கும் ஈடுசெய்ய முடியாத ஒரு இழப் பாகும். என்றும் நண்பனின் நினைவுகளைச் சுமந்தபடி அவனின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



# வினாக்களைத் தொடுக்கும் அஸ்வினின் தீர்க்கததிசன கருத்துக்கள்

**நடராசா கணேசமூர்த்தி.**
தொடர்பாடல், ஊடகக்கற்கை ஆசிரியர்
ஊடகவியலாளர், வீரகேசரி.

ஈழத்து இதழியல் வரலாற்றில் அஸ்வின் என்ற ஆளுமை நிறைந்த ஊடகவியலாளனுக்குத் தனித்துவமான ஒர் இடம் உண்டு. அமைதி யான சுபாவமும் ஆழ்ந்த நுண்ணறிவும், நிறைந்த தூர திருஷ்டிப்பார் வையும் மிக்க, துடிப்புள்ள இளம் ஊடகவியலாளர் அவர். வீரகேசரி, தினக்குரல், யாழோசை போன்ற பத்திரிகைகளில் வெளிவந்த அவரது ஆக்கங்களும் ஆவணப் பதிவுகளும் வாசகர் நெஞ்சங்களில் நிரந்தர மான இடத்தைப் பிடித்துள்ளன என்பதை மறுக்க முடியாது.

மிகச்சிறந்த பத்தி எழுத்தாளர் விருதினைப் பெற்றுக் கொண்ட அஸ்வின் சுதர்சன் கருத்துப்படங்களும் கேலிச்சித்திரங்களும் வரைவ தில் வல்லவர். எதிர்காலத்தில் நடக்கக் கூடிய விடயங்களை முன்கூட்டியே தீர்மானித்து தீர்க்கதரிசனம் மிக்க கேலிச்சித்திரங்களையும் கருத்துப் படங்களையும் வரைந்து இவ்வகைப் பத்திரிகை வரலாற்றில் சாதனை படைத்தவர்.

சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்குரலாக ஒலித்தவர். பிற்பட்ட மக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டவர். சமூக ஒழுங்குமுறை

களை மையமாக வைத்து எழுதியவர். குறும்படங்கள் பலவற்றையும் தயாரித்து வெளியிட்டவர்.

கடந்த காலங்களில் யாழ் ஒசை பத்திரிகையில் ஆசிரியராக அஸ்வின் இருந்த காலங்களில் அஸ்வினுக்கும் எனக்குமான அறிமுகம் உருவானது. நான் எழுதிய தொடர் கட்டுரைகளை ஆஸ்வின் யாழ் ஒசையில் அர்வத்துடன் பிரசுரித்திருந்தார்.

அதற்கும் மேலாக யாழ்ப்பாண நினைவுகள் தொடரினை வெளியிட்டு பிரபலமான திரு வேதநாயகம் தபேந்திரன் அவர்களது யாழ்ப்பாண நினைவுகள் நூலின் இரண்டாம் பாகத்தின் அசுப் பணிகள் எமது தேவி Printers நிறுவனத்தில் நடைபெற்ற சமயம். அந் நூலுக்கான அட்டைப் படத்தினை வரைந்தும் அதற்கான திருத்த வேலைகளுக்காக பல தடவை எம் நிறுவனத்திற்கு வருகைதந்து, எமது பதிப்புகளின் துல்லியத்தன்மை கண்டு தான் தனது காட்டூன்களை நூலாக வெளியிட எம்மை அனுகுவதாக கூறியிருந்தார். ஆனால் இன்று அவர் இன்றி அவருடைய நூல் வெளிவருவது கவலையுடன் கூடிய திருப்தியே.

இருப்பத்தோராம் நூற்றாண்டில் இலங்கையில் வெளிவந்த பத்திரிகைகள் பலவும் அஸ்வின் வரைந்த கேலிச்சித்திரங்களையும் கருத்துப் படங்களையும் வெளியிட்டுத் தமது விற்பனையைப் பெருக்கிக்கொண்டன. அஸ்வின் அவர்களின் திடீர் மறைவு ஈழத்து இதழியல் வரலாற்றில் ஈடு செய்ய முடியாத பேரிழப்பினையும் கேலிச்சித்திரங்கள் மற்றும் கருத்துப்படங்கள் தொடர்பான ஊடகத்துறையில் மிகப் பெரிய வெற்றிடத்தையும் உருவாக்கி விட்டது. "அஸ்வின்" இன்று எம்முடன் இல்லாவிட்டாலும் இன் நூல் மூலமாக அவரது தீர்க்கததிசனக் கருத்துக்கள் இன்றும். நடைமுறை உலகை கேள்வி கேட்டுக்கொண்டு தான் இருகின்றன.



# உண்மை மனிதனை உரைக்கிறேன்.

**வேதநாயகம் தபேந்திரன்**

அஸ்வின்....

நாளாந்தம் மனம் நிறைய அழைத்த பெயர்களில் ஒன்று. மனம் நிறையும் வண்ணம் உண்மையாகவும், நேர்மையாகவும், திறமையாக வும் வாழ்ந்த அன்புத் தம்பிகளில் ஒருவன். ஊடக தர்மம் என்னவென்று உதாரணமாக வாழ்ந்தவர்களில் ஒருவன். எனது வீடு வரை வந்து உறவு பாராட்டியவர்களில் ஒருவன். கொடும் விதி தின்ற மனிதர்களில் ஒருவன். வீரகேசரிக்கும் எனக்குமான எழுத்து உறவு ஏற்பட்ட காலத்தில் அறிமுகமான ஒருவன். வீரகேசரியின் யாழ் பிராந்திய அலுவலகத்தின் செய்திப் பிரிவில் கடமையாற்ற வந்திருந்தான். வருகின்ற செய்திக ளைத் தரம் பிரித்து, வாசகனுக்கு ஏற்ற செய்திகளாகவும், பத்திரிகை நிறுவனத்தின் நோக்கை வெளிக்காட்டும் செய்திகளாகவும் உருவம் கொடுத்தான்.

வீரகேசரி நிறுவனம் "யாழோசை" எனும் பெயரில் வார நாள் பத்திரிகை ஒன்றை ஆரம்பித்தது. அப்போது அதன் செய்தி ஆசிரியர் என்ற பணி அஸ்வினுக்கு கொடுக்கப்பட்டது. வெளிப்பார்வையில் செய்தி ஆசிரியராக தெரிந்தாலும் யாழோசையின் உயிர் மூச்சாகத் திகழ்ந் தான். அப்போது வீரகேசரியின் வட பிராந்திய முகாமையாளராக இருந்த திரு. சௌந்தரராஜன் அடிக்கடி கூறுவார் " யாழோசைக்காக அஸ்வின்

உயிரையும் விடுவான்" என்று.

அஸ்வினின் மிகக் கடுமையான உழைப்பு அதன் ஒவ்வொரு பக்கங்களிலும் தெரியும். செய்திகளைத் தொகுத்தளிப்பது, கட்டுரைகளைத் தேடி எடுப்பது, ஓவியம் வரைவது, "கேட்டியளோ சங்கதி" எனும் பத்தி எழுத்துக்களை தான் எழுதுவது, ஊர்ப்புதினம் எனும் பெயரில் எனது ஆக்கத்தை பிரசுரிப்பது, இலங்கை தமிழ் சினிமாவின் வரலாறு , ஈழத்து குறும்படத் தயாரிப்பு முயற்சிகளுக்கு ஊக்குவிப்பது, மாணவர் ஆக்கங்களுக்கு ஆதரவு வழங்குவது என யாழோசை நிறைவான ஒரு பத்திரிகையாகத் திகழ்ந்தது. கேட்டிங்களோ சங்கதி பத்தி எழுத்துக்களுக்கு இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் 2011 இல் விருதளித்துக் கௌரவித்தது. மிக இளம் வயதில் சிறந்த பத்திரிகையாளன் விருதைப் பெற்றான்.

யாழோசையில் எம்மைக் கடந்து சென்ற மண்வாசனை எனும் பெயரில் என்னை யாழ்ப்பாணத்தின் கடந்து போன நினைவுகளை அடிக்கடி எழுத வைத்தான். அதன் அடுத்த பரிணாமமாக தினக்குரல் வாரமலரில் யாழ்ப்பாண நினைவுகள் எனும் கட்டுரை வடிவிலான ஆக்கத்தை 2012, 2013 ஆம் ஆண்டுகளில் எழுதினேன்.

அஸ்வின் அப்போது அடிக்கடி கூறுவான் "அண்ணை , எமது இனம் சார்ந்த அடையாளங்கள் , ஆவணங்களை நாம் பாதுகாக்க வேண்டும் . அடுத்த சந்ததிக்குக் கையளிக்க வேண்டும். இது காலம் எமக்குத் தந்த கடமை.

உலகம் உங்களின் எழுத்துக்களைப் பார்த்துக் கொண்டிருக்கும். இதற்கான அங்கீகாரத்தை உங்களுக்குத் தரும். விடாமல் எழுதுங்கள் அண்ணை என்பான். அடிக்கடி தந்த ஊக்குவிப்பு எனக்கு பெரும் ஊக்க மருந்தாக இருந்தது. பயணிக்க வைத்தது. யாழ்பாண நினைவுகளை நூல் வடிவாக்கிய போது சகலரிடமும் அதனை அறிமுகம் செய்தான். ஊடகங்கள் வாயிலாக பிரபலமடைய உதவினான்.

யாழ்ப்பாண நினைவுகள் - பாகம் 2 நூலுக்கு அஸ்வின் வரைந்த அட்

டைப்படம் அழகு செய்தது.

சைக்கிள் டைனமோ சுற்றி றேடியோ கேட்ட காலத்தினை அழகுறப் பதிவு செய்தான்.

அஸ்வினின் பயணம்; வீரகேசரியிலிருந்து தினக்குரலுக்கு தடம் மாறியது.

பன்முக ஆளுமைகள் இருந்தும். அவனது காட்டூன்கள் தான் அவனுக்கு பெரிய வரவேற்பைக் கொடுத்தது. தினக்குரலில் அவன் வரைந்த கார்ட்டூன் கள் இலங்கை அரசியல் தளத்தைப் பெரிதும் உலுக்கி எடுத்தது.

அமைச்சர்கள் உட்பட பெரும் அரசியல் தலைவர்கள் யாவரும் யார் இந்த அஸ்வின் என கேட்டு விமர்சனம் செய்யுமளவிற்கு அவை அரசியல் அரங்கை அதிர வைத்தது.

அஸ்வின் தனது மறைவிற்கு பின்பாக அரசியல் நிலைமைகள் எப் படி இருக்குமெனப் பல தீர்க்க தரிசனக் காட்டூன்களை வரைந்து விட்டே சென்றுள்ளான். அவை இன்று அரசியல் அரங்கில் ஞாபகப்படுத்தப்பட்டு நினைவு கூரப்படுகின்றது. அஸ்வின் வாழ்ந்த காலத்தில் அவன் வரைந்த காட்டூன்கள் பல அரசியல் நீரோட்ட பாதையில் திசை மாற்றத் தைக் கூட ஏற்படுத்தியுள்ளன. சமூக வலைத்தளமான முகநூலில் (Face-book) அஸ்வின் தனது அளப்பரிய பங்களிப்பைச் செய்துள்ளான். சமூ கத்தில் தான் காணும் சின்னத் தனங்களை தர்க்க ரீதியாக விமர்சனம் செய்வான். நல்ல விடயங்களை அறிமுகம் செய்து பாராட்டுவான். முகநூல் வேலை வெட்டி இல்லாத பலரின் பொழுது போக்கு மையமாக இருக்கும் போது அஸ்வின் அதற்கு ஒர் உயர் தரத்தைக் கொடுத்தான். சமூகம் வாழ வேண்டும், உயர வேண்டும் என்பதே நாளாந்தம் அவனது பதிவுகளில் ஏக்கமாக இருக்கும்.

நடிப்புச் சுதேசிகள் நிறைந்த உலகத்தில் உண்மைகள், நேர்மைகளால் மட்டும் வாழ்க்கையை நிறைத்தான். குறுந் திரைப்படங்கள் தொடர்பான

பங்களிப்புக்காக விருது பெற்றவன். குறும்படம் தயாரிக்கும் பலருக்கும் யாழோசை மூலமாக தனது பலமான ஆதரவை வழங்கினான்.

யாழ் சுதந்திர ஊடக அமையத்தால் மறைவின் பின்பு மாமனிதர் தராகி நினைவு விருதும் அண்மையில் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

செய்தி ஆசிரியனாகப் பணி புரிந்த போது கிடைத்த செய்திகளின் உண்மைத் தன்மைகளை உறுதி செய்வதற்கு மிகக் கடுமையாகப் பாடு படுவான். ஏதேனுமொரு இலத்திரணியல் ஊடகத்தில் செய்தி வெளிவந் தால் தான் சார்ந்த பத்திரிகைக்கு அது கிடைக்கப் பிந்தினால் உடனே பிரதேச செய்தியாளருடன் தொடர்பு கொண்டு செய்தியின் ஆழ அகலங் களைப் பெறுவான்.

அதனை வாசகனைக் கவரும் வண்ணம் உண்மைத் தன்மையுடன் பிர சுரிப்பான்.

கட்டுரைகளை அனுப்பி வைப்பவர்கள் தகவல் திரட்டுவதில் ஏதா வது இடைவெளி விட்டால் கூட அவர்களுடன் தொடர்பு கொண்டு அனு மதி பெற்று தான் திரட்டிய தகவல்களை இணைத்து ஆக்கத்தை நிறைவு செய்வான்.

பத்திரிகை உலகில் தான் சந்தித்த சின்னத் தனங்களை அற்ப மனி தர்களை பற்றி மனம் புழுங்கிக் கதைப்பான். தனக்கு சரி எனப் பட்டதை எந்தப் பெரிய மனிதராயினும் நெற்றிக்கு நேரே கதைப்பான்.

அஸ்வினது பன்முக ஆளுமைத் திறன்களில் கார்ட்டூனும் ஒன்று. இக் கார்ட்டூன்கள் தான் அவனை சர்வதேச அளவில் பேச வைத்தது. கோடுக ளால் அவன் பேசிய வாழ்வின் கோலங்கள் திடீரென அவனை யார் எவ ரென உலகம் தேட வைத்தது. தினக்குரல் பத்திரிகை அதற்கான களத்தை அமைத்துக் கொடுத்தது. இலங்கை அரசியலின் நிகழ்கால அரசியல் போக் குகளைப் படம் பிடித்துக் காட்டினான். பல கார்ட்டூன்கள் தீர்க்க தரிசனம் போல இன்று போற்றப்படுகின்றது.

அவனது ஆக்கங்களை இன்று இணையத் தளங்களில் மீள் பிரசுரம் செய்கின்றனர்.

அஸ்வின் இன்று இருந்திருந்தால் நிகழ்கால அரசியலை எப்படி பேசி யிருப்பான். அதனூடாக எதிர்காலம் பற்றி எப்படி முன்னோட்டம் செய்தி ருப்பான் எனப் பலர் கதைக்கின்றனர்.

வேகமாக வாழ்ந்தான் வேகமாகச் சாதித்தான். தனது உதிரமாக ஒரு மகளை இந்த உலகுக்குத் தந்து விட்டு வேகமாகவே போய் விட்டான். எனது யாழ்ப்பாண நினைவுகள் பாகம் 2 நூல் வெளியீட்டின் போது அவன் தத்ரூபமாக வரைந்து தந்த ஓவியத்திற்காக பொன்னாடை போர்த்திக் கௌரவித்தேன்.

என்னுடன் உண்மைத் தம்பியாக உறவாடிய அவனின் பிரிவு என் ஞாப கத் துளியின் இறுதி வினாடி வரை என்னில் வாழும்.

அவனின் இறுதி ஊர்வலத்தில் இணைந்தேன். மீண்டும் இந்த நூல் ஆவணத்திலும் இணைந்து உள்ளேன். போய் வா. மறு பிறவி உண்டா கில் மீண்டு வா. உனக்காக நாம் உள்ளோம்.






கோடுகளால் பேசியவன்











நூல் வெளியீட்டு


மெல்லக்கொல்லும் சுனாமி !!
அஸ்வின்


வித்தியா கொலை வழக்கு
உதென்ன...ஒரே போக்குக்காட்டி உசுப்புது..?!
மேல் நீதி மன்றம்
வித்தியா கொலை வழக்கு
ம்ம்...





கோடுகளால் பேசியவன்



அவர்
என்னத்த
தேடுறார்
மச்சான்..?
உடைஞ்ச மூக்க
தேடுறார் போல...
Thinakkural.


அப்பாவ
விடுங்கோவேன்
அங்கிள்
கைதிகளை
விடுதலை
செய்க!



ஆரம்பம்
நிதிக்குற்ற விசாரணை
இப்போது
நிதிக்குற்ற விசாரணை
அஸ்வின்.


Syria
அஸ்வின்.


சர்வதேச விசாரணை தேவையில்லை
சர்வதேச நீதிமன்றமே வேணும்
அஸ்வின்.


வளர்ப்பும் அழிப்பும்
அஸ்வின்.



1000
அஸ்வின்


வடக்கு மாகாணசபையில்...
சம்பள அதிகரிப்பு வழங்கு !
அஸ்வின்



எதிர்கால சந்ததிக்காக நாட்டை கட்டியெழுப்புவோம்
-ஜனாதிபதி
கிருசாந்தி
இசைப்பிரியா
சரண்யா
ஜெருஷா
வித்தியா
சேயா
இதெல்லாம் என்ன அப்பா...?
அஸ்வின்



தமிழ் மக்கள் பேரவை
த.தே. கூட்டமைப்பு
எங்களின் பிரார்த்தனை எல்லாம் இதுதான்..
அஸ்வின்



தம்பி, கெட்டியா பிடிச்சுக்கோ
இதுதான் கடைசி மரம்.
T.M.P.
T.N.A.
அஸ்வின்.



சர்வதேச விசாரணை
உள்ளக விசாரணை


மகனின் விடுதலைக்காய்
ஒருதாயின் 25 வருடப்பயணம்
அஸ்வின்


அடக்கு..! அமுக்கு..!
உஸ்
உஸ்
வடக்கு மாகாண சபை
தமிழ் அரசுக் கட்சி
வடக்கு ஜல்லிக்கட்டு
அஸ்வின்



இதுவா... இனநல்லிணக்கம்...?
எங்க, முருகனை காணோம்..?
அஸ்வின்


எம்.பிக்களுக்கு சொகுசு வாகன சலுகை
MP
MP
MP
TAX
அஸ்வின்



2016
2018





வித்தியா வழக்கில் திருப்பம்
ஊர்காவற்றுறை
யாழ்ப்பாணம்


இதுதான் தேவை
Made in Afroad
Made in Lanka
அஸ்வின்.



இல்லை..
இல்லை...
வடமாகாணத்திற்குள்
முதலைகள் !
அஸ்வின்


அஸ்வின்.


அஸ்வின்.


1995
2015
அஸ்வின்

அஸ்வின் சுதர்சன்










கோடுகளால் பேசியவன்


துடிப்பான நாம் மக்களுக்காக 'அயராது' பாடுபடுவோம்
நேற்று
வடமாகாணசபையில்...
கொர்ர்ர்....
இன்று
வடமாகாணசபையில்...
கொர்ர்ர்ர்ர்ர்....
நாளை
ணசபையில்...



இது என்ன கொடுமை..!
முன்னாள் போராளிகள்
105
106
107
அஸ்வின்


இந்தப் புண்ணை முழுமையாக கழற்றலாம். இது ஆறிப் போச்சு
காணிகள்
இந்த மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டும்
We Want Our Land
அஸ்வின்



தமிழ் மக்களின் குடியிருப்பு காணிகள் 'மட்டும்' விடுவிப்பு!
இதுதான் காணி விடுவிப்பா..?!!
அஸ்வின்


யாழ்ப்பாணம் என்றால் நினைவில் வருவது
அப்ப...
இப்ப...
அஸ்வின்


பொசு.. பொசு.. பாப்பம் என்னண்டு.
T.M.P
T.N.A
தீர்வு..! தீர்வு..!
ம்.. ம்..
தீர்வு
2016
2015
அஸ்வின்


அப்ப..
தம்பி... வெளிய போகாதே..
பேய்,பிசாசு பிடிக்கும்
இப்ப..
தம்பி... வெளிய போகாதே..
வாளால வெட்டுவாங்கள்
அஸ்வின்


'கிளிக்'
கஞ்சா மீட்பு
ஏ...ஏய்..
தப்பிட்டேன்
போதைப்
பொருள்
அஸ்வின்


காலக்கொடுமை
அன்று
இருதயம்
இன்று
இதயம்
அஸ்வின்


நான் போகாதது
நல்லதாப் போச்சு
அஸ்வின்





## இப்படிக் காட்டாதீர்கள்





வடக்கு பொருளாதார மத்திய நிலையத்திற்கு ஓமந்தையே சரியான இடம்
...! எல்லோரும் தாண்டிக்குளத்திற்கு இழுங்கோ... முதலமைச்சருக்கு ஒரு பாடம் படிப்பிக்கணும்
தாண்டிக்குளம்
ஓமந்தை
ஐயா சொல்லுறது தான் சரி


பங்கு பிரிப்பு !
மாங்குளம்
வடக்கு பொருளாதார மத்திய நிலையம்
ஓமந்தை
தாண்டிக்குளம்


தமிழ் மக்கள்
பேரவை


தமிழ் மக்களுக்காக...
வடமாகாணசபை உறுப்பினர்கள்


மாகாண சபையில்
அடுத்த முறையும் நாங்கள் தான்...


இப்படியே போய்,
இந்த அரசாங்கத்திற்கு
பயம் காட்டுவோம்...
பாத
யாத்திரை


அஸ்வின்
ThinaKKural.lk


அவர் எனக்கு
அரசியலில் மாணவன்
நான் பெரிசு..
நீ பெரிசு அல்ல...
மக்கள் மனங்களில்
யார் பெரிசு
என்பதே முக்கியம்


வடிவம்தான் வேறு ஆனா..
இரண்டும் ஒன்று தான்....
த.தே.கூட்டமைப்பு
த.ம.பேரவை
அஸ்வின்.



மரணித்த மக்களுக்கான அஞ்சலி
அஸ்வின்.



கோடுகளால் பேசியவன்


துரோகி!
Murali
அஸ்வின்


வெளிநாட்டு நீதிபதிகள்
தேவையில்லை
நாங்களே பார்த்துக்கிறோம்
உள்ளக விசாரணை
அஸ்வின்


வவ்..
வவ்..
வவ்..வவ்..
ஊடகம்
வவ்..
வவ்..
அஸ்வின்.


தொடரும் பாலியல் வன்கொடுமைகள்
முடிவு காணாது
கடந்து செல்கின்றோம்
அஸ்வின்.


எங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வேணும்
அஸ்வின்


வடமாகாணசபையில்...
2½ வருடங்களாக
2½ வருடங்களுக்கு பின்
தீர்மானங்கள்
உறுப்பினர் நம்பிக்கையில்லா தீர்மானம்
அஸ்வின்


புத்தம் சரணம் கச்சாமி....
டேய்..
டேய்..
அஸ்வின்


பொதுத்தேர்தல்
தேசிய பட்டியல்
தேசிய பட்டியல் அவுட்
அஸ்வின்


இரட்டை பிரஜாவுரிமை தருகிறோம்
இலங்கைக்கு வாங்கோ...
ஆயிரக்கணக்கான
இராணுவமும்
பொலிஸாரும்
இருக்கும்
யாழ்ப்பாணத்தில
நடக்கும் கொலை,
கொள்ளைகளை
தடுக்க முடியவில்லை
இதற்குள்
இது
வேறையா..?
நல்ல கதைதான்..


மதவாதம்
30


திரைமறைவு நகர்வு
வடக்கு பொருளாதார மையம்
மாங்குளம்
ஓமந்தை
தாண்டிக்குளம்
மதவாச்சி
அஸ்வின்


உங்களின் உடனடிப் பிரச்சினை என்ன...? என்ன..?
கேப்பாப்புலவு
எமது காணிகள் வேண்டும்
அஸ்வின்


அட... சே..
வாங்கி வைச்ச
கழிவு
ஒயிலுக்கு
வேலையில்லாமல்
போச்சே..
அஸ்வின்


வாழும் வீரர்
Living Hero
இதத் தான்
2016 ல
கிடைக்கும்
கிடைக்கும்
எண்டவரோ..!
அஸ்வின்



அன்று 1980 களில்...
காணாமல் போனோரைக் கண்டுபிடி...!
மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் !
இன்று 2016 இல்...
காணாமல் போனோரைக் கண்டுபிடிக்க வேண்டாம்.
அஸ்வின்


மயிலிட்டி
டும்
டும்
டும்
மாவை அங்கிள் கேக்....
இதற்குத்தானா.... நாங்கள் எல்லோரும் வாக்களித்தோம்
தாங்ஸ் பேபி
TAX
எமது நிலம் வேண்டும்
அஸ்வின்




கோடுகளால் பேசியவன்


எங்களுக்குள் பிரிவினை இல்லை
ஓமந்தை
தாண்டிக்குளம்
வடக்கு பொருளாதார மையம்
அஸ்வின்



சுமா
கெதியா வாடாப்பா
சம்பந்தர் குழு எங்க ஓடுகினம்..?
தமிழருக்கான தீர்வு குறித்து இப்பதான் ஆராயப் போகினம்
அப்ப... தீர்வு எப்ப கிடைக்கும்?
அஸ்வின்


சிங்களத்தில்....
வெளிநாட்டு நீதிபதிகள் தேவையில்லை
எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு
கபாலிடா...
தமிழில்....
வெளிநாட்டு நீதிபதிகள் தேவை இல்லை எனக் கூற முடியாது
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் தெரிவிப்பு
அஸ்வின்
கபாலிடா...


தலைவீரே... சமஷ்டியா..?
ஒற்றையாட்சியா..?
அஸ்வின்
?!
ஒற்றையாட்சிக்குள் சமஷ்டி !
?!
2016ல் தீர்வு
ஒற்றையாட்சி


MR வாங்களேன்
சேர்ந்து பயணிப்போம்.
Bore அடிக்குது...
போர் குற்றச்
சாட்டுக்கள்
அஸ்வின்



தடம் மாறுகிறதா தமிழ்த்தேசியம்..?
2016ல்
தீர்வு ?
தம்பி சுமந்திரா...
நாங்கள் போற
பாதை சரிதானே..?
ஓம்...ஓம்.. தலைவீரே.
நாங்கள் போற
பாதைதான் சரியானது.
ஹலோ.. ரணில் சேர்...
அஸ்வின்


SAMANTHA POWER JAFFNA VISIT
This is the srilanka war
M.p.
woo.. sad
camp
Aswin


குறுகிய காலத்தில் வடக்கு,கிழக்கில் வீடுகள்
மீள் குடியேற்ற அமைச்சு அமைக்கும் வீடுகள் மக்களுக்கு ஏற்றவையல்ல
- வடமாகாண முதலமைச்சர்
அஸ்வின்


திருட்டு வாக்குகளால்
வென்றவர்கள்
தோற்றவரை ஏளனம்
செய்வது கொடுமை !
அஸ்வின்


T20
ICC
WORLD
TWENTY20
INDIA 2016


அன்று
நேற்று
இன்று
Selfie with


அண்டைக்கு....
தம்பி
நீங்க நம்மாளு...
இன சுத்திகரிப்புத் தான்
இன சுத்திகரிப்புத் தான்
இன சுத்திகரிப்புத் தான்
இண்டைக்கு...
பாய்... நல்ல ஆடு புரியாணிக்கு செம...



ஒற்றையாட்சி
அஸ்வின்.







Thinakkural.lk


தமிழ் மக்களும் சுமந்திரன் எம்.பியும்
சட்டப்படி இதுதான் வட்டம்
அஸ்வின்


தமிழ் மக்கள் இறந்தவர்களுக்கு அஞ்சலி செய்ய அனுமதிக்க வேண்டும்
ஊருக்குத்தான் உபதேசம் உனக்கில்லடி கண்ணே...
அரசாங்கம்
அஸ்வின்


இனப்படுகொலை
நடக்கவில்லை
அஸ்வின்.


கிணற்றுப் பூதத்தை காப்பது யார்?
"ஜிந்தாக்கா
ஜிந்தா, ஜிந்தா
ஜிந்தா..ஜிந்தா"
ஒயில்
அஸ்வின்.

## சுப்பண்ணையும் பேஸ்புக்பெடியனும்





## சுப்பண்ணையும் பேஸ்புக்பெடியனும்




நான் தீக்குளிப்பேன்
என் மீது இவருக்கு எம்புட்டு ஆசை...
அவங்கள தீயிட்டுக் கொழுத்த வேணும்
OIL
அஸ்வின்



சேர்..
சேர்..
கொலை..
கொலை..
அஸ்வின்


மீன் குடியேற்ற அமைச்சு
நான் பிரச்சினைகளை சீக்கிரமே முடிச்சுப்போடுவேன். நீங்கள்.. 15 வருசம் ஜாலியா இருக்கலாம்
15 வருசத்துக்கு அப்புறம்...?
அஸ்வின்


எங்களுக்கு இப்படித்தான் தெரிகிறது
எங்களின் பிள்ளைகள் வேண்டும்
எங்களின் காணிகள் வேண்டும்
அஸ்வின்


அறிக்கைகள்
அஸ்வின்


ஒரு
கூர்வாளின்
நிழலில்
தமிழினி
அஸ்வின்


போர்க் குற்றச்சாட்டுகள்
சர்வதேச விசாரணை
உள்ளக விசாரணை
நீங்க சொன்னா
அஸ்வின்.


அஸ்வின்.


நான் ஊமை
எங்களுக்கு நீங்கள் தான் வேணும்
மாகாண
கட்சி
தமிழ் மக்கள் பேரவை
அஸ்வின்


வடமாகாண சபையை சும்மா விடேலாது...!!
வடமாகாணசபை
TNA
அஸ்வின்


சிறந்த
எதிர்க்கட்சித்
தலைவர்..!
காணிகள்
தமிழர்
தீர்வு
பிரச்சினை
விடுவிப்பு
உள்ளக
தெரி
கைதிகள்
விடுதலை
விசாரணை
அஸ்வின்


தமிழ் மக்களின் விருப்பம்
சேந்திருவாங்களோ..?
அஸ்வின்



முதலாளித்துவ பட்ஜெட் 2016
சீனி
பட்ஜெட்
பால்மா
RS


ஜூலை 23
ஈழத்தமிழர்களின்
மாறாவடு

## அனுராவின் பொழுதுபோக்கு




## இந்த நிலை மாறுவது எப்போது...?




எங்கே இருக்கிறது ?



## அரசியலில் ராசி இல்லா ராசா அனுரா




## நீதி வழங்க ஏன் இந்த அவசரம் அகாஷீ




## சமாதானத்தைக் குழப்ப அயராது பாடுபடும் அம்மையாரும் இனவாதிகளும்




## சிவில் நிர்வாகத்தில் இராணுவம் தலையிடக்கூடாது - மீரப்பன



## அரசைக்கவிழ்க்கும் மறைமுக முயற்சியில்




## இப்போது அரசியல் வாதிகளின் நினைவெல்லாம்...!



## யாழ்ப்பாணமே விழித்துக்கொள்!




## பொங்கு தமிழின் பூரிப்பை உணர்ந்து விட்டதோ ராணுவம்...



# குடாநாட்டு விவசாயி...








## ஜே.வி.பி. தெருக்கூத்துக்கு ஆயத்தம்




## இனவாதிகளின் இன்னுமொரு தடைக்கல்...!




யாழ்ப்பாணத்தில் அரசின் நிர்வாகக் கட்டமைப்பு...
கடவுளே! இறப்பவன் ஆன்மா சாந்தியடையட்டும்.
அஜய்..


பிசுபிசுத்துப்போனது இராணுவ ஆட்சே
இராணுவ ஆட்சே- நிலையம்
அஜய்.

## அமைச்சின் வேலையை உணர்ந்த அமைச்சர்





## தமிழர் பதவி உயர்வு = பப்பாமரம்



## இன வெறிக்கு முதல் ஆப்பு...




## ச...ர்...ஆரம்பம்...?




ஜே. வி. பி. யின் அரசியல் பயணம்


பேரினவாதத்துக்குத் தலையும்... சமாதானத்திற்கு
வட - கிழ
பிரிக்க
கையெழுத்து வேட்டை
அஜய்...


நிரந்தர சமாதானமே
எமது நோ...க்கு!


இராணுவக் காவலரண் முள்ளுக்கம்பியைப் பிடித்த மாணவனை மின் தாக்கி
அனுமதியின்றி
நுழைவோருக்கு
துறைந்தபட்ச
தண்டனை
வழங்கப்படும்.

## ஜே.வி.பி. சு.க. கூட்டுக்கு அநுரா உயிரையும் கொடுப்பாராம்




## அம்மையாருக்கும் பழக்கி விட்டார்கள்....!




எல்லை




ஒரு குடிசை
கோயிலாகிறது
அஸ்வின்


அஸ்வின்

Umachandraa Pragash added 2 new photos.
June 16

Follow ···

மறைந்த Aswin Sutharsan இன் தீர்க்கதரிசனம்

Provide translation to English




Jeevalingam Kasirajalingam ▸ Aswin Sutharsan ···
October 2, 2016

மாதகல்வாசி அறிஞர் அஸ்வின் நினைவுகளைப் பகிருகிறேன்.

இலங்கை ஊடகங்களில் பணியாற்றுவதென்பது கத்தியின் கூர் விளிம்பில் நடப்பது போலத் தான் இருக்கும். இங்கே கருத்துகளைக் கவனமாகக் கையாளத் தெரிந்தாலும் ஊடகக்காரனுக்குத் தற்காப்புத் வேவைப்படுகிறது. இந்நிலை அறிந்தும் தம்பி மாதகல்வாசி அஸ்வின் சுதர்சன் துணிச்சலுடன் ஊடகங்களில் பணியாற்றி வெற்றி பெற்றவர் என்பதால் அவரது பதிவுகளை உலகெங்கும் வாழும் தமிழர் அறியும் வண்ணம் அவரது நினைவாக "மாதகல்வாசி அறிஞர் அஸ்வின் சுதர்சன் சொன்ன செய்தி அதிர்வுகள்" என்ற மின்நூலை வெளியிட்டுத் தங்களுடன் பகிருகிறேன்.

மின்நூலைப் படிக்கவோ பதிவிறக்கவோ கீழ்வரும் இணைப்பைச் சொடுக்குக.
http://www.ypvnpubs.com/2016/10/blog-post.html



**Ulaka Maka Saanakkiyan**
June 15 ·

நன்றி,
தீர்க்கதரிசன கலைஞர் அமரர் அஸ்வின்
இது போன வருடம் அமரர் அஸ்வின் வரைந்த கோட்டோவியம்.

முதல்வர் மீதான தற்போதைய சதிமுயற்சி,
நீண்டகாலத்திட்டமிடலுடன் நடந்தது என்பதை அமரர்
அஸ்வினின் இந்த கோட்டோவியம், எமக்கு விளக்குகிறது.

Provide translation to English




**Ulaka Maka Saanakkiyan** updated his cover photo.
June 7 ·

தீர்க்கதரிசன கருத்தோவியர் அமரர் அஸ்வின்

Provide translation to English



**Matheesan Thanabalasingham** updated his status.
September 29, 2016

இது மாதிரி என்னை அடிக்கடி உற்சாக வார்த்தைகள் கூறி ஏற்றி விடும் ஒரு அண்ணன் இனி கிடைப்பாரா? நேரிலே காணும் நேரம் எல்லாம் எப்ப அடுத்த பாட்டு? முந்தய படைப்புகளின் குறை நிறைகள் என பல விஷயங்கள் கதைச்சு அறிவுரை சொல்லும் ஒருவரை இழந்திருக்கிறோம்.
பள்ளிக்கூடத்துல சும்மா பாட்டு செஞ்சு கொண்டிருந்த பெடியனை வீரகேசரி பத்திரிகையில் அரைப் பக்கம் வரைக்கும் செவ்வி காண வைத்து என்னுடைய இந்த நிலைக்கு பெரும் உற்சாகமாக இருந்த அண்ணன். அவரின் என் தொடர்பான பதிவுகள் சில நினைவு மீட்டலாக......
miss you Aswin Sutharsan anna.
அடுத்த பிறப்பிலாவது ஊடக சுதந்திரம் உள்ள ஒரு நல்ல நாட்டில் பிறக்க வேண்டுகிறேன்.




**Ratnasingam Sharveswara**
அஸ்வின் ஏன் மறைந்தான் என்பதை காலம் தோறும் நினைக்க வைக்கின்றான்...
22 August at 11:36 · Like · Reply · 1

**Ramanan Keeran** is with **Aswin Sutharsan.**
28 September 2016

ஊடக உலகத்தில் காட்டூனிஸ்ற் களின் திறண்.. வித்தியாசமானது.. ஆயிரம் சொற்கள் சொல்லும் அர்த்தங்களை ஒரு காட்டூன் சொல்லிவிடும்.... அண்மைய காலமாக பேசப்பட்டு வந்த ஊடகவியலாளர் காட்டூனிற் அஸ்வின் சுதர்சன் காலமானார் என்கிற துயரச் செய்தி வலிக்கிறது..

காட்டூனிஸ்றகளில் அண்ணன் பயஸ் அவர்களின் பின்னர் அஸ்வின் பேசப்பட்டார்..
ஆனால் இன்று அவரை இழந்தது மிகுந்த துயர் நிறைந்தது..



**MaThi Sutha** is with **Aswin Sutharsan.**
29 September 2016 ·

என்னுடைய, உண்மையான ஒரு ரசிகனை இழந்து விட்டேன்,
ஊடகவியலாளனாகவும், சிறந்த கார்ட்டூனிஸ்ட் ஆக அறியப்பட்டாலும் ஈழ சினிமாவை வளர்க்க வேண்டும் என்று ஆரம்பகாலங்களில் இருந்து (போருக்குப் பின்னான) உழைத்த இவரை பல சினிமாக்காரருக்கே தெரியாது.
பத்திரிகையில் தொடர்ச்சியாக ஆக்கங்களை பதிவு செய்தவர், ஒரு குறும்படமும் இயக்கியதுடன் அதற்கு AAA யில் விருதும் பெற்றிருந்தார்.
ஈழம் சாராத படம் எடுக்கும் யாரென்றாலும் நேரடியாகவும் பகிரங்கமாகவும் தட்டிக் கேட்டு எதிரிகளைச் சம்பாதித்தும் சோராது பேசும் மனிதன்......

இத்தனைக்கும் மேலால் மாதத்தில் ஒரு தடவையாவது போன் போட்டு "மதி உங்கட சினிமா பணி எப்படிப் போகிறது, ஆயிரம் எதிர்ப்புகள் பிரச்சனைகள் வரும் தயவு செய்து விட்டுடாதிங்கோ " இது தான் பேச்சாக இருக்கும், கடைசியாக பேசும் போது உம்மாண்டி பற்றியே ஒரு மணித்தியாலம் பேசியிருப்பார், ஊடகம் சம்மந்தமான பகுதிக்கு தான் பொறுப்பு முதல்ல படத்தை முடியுங்கோ, நான் 100 ரிக்கேட் வித்து தருவன் என்று ஊக்கம் கொடுத்தார்.



**Suba Sutha ▶ Aswin Sutharsan**
22 October 2016 ·

மாதகல் மண்ணில் வந்துதித்த
மகத்தான நண்பன் அவன்
அஸ்வின் என்ற நாமத்துடன் அறியப்பட்டேன்
மாதகலிலே குறும்படம் வெளியீடு வர
பாராட்டு தெரிவிக்க தேடியபோது
பல்துறை வீரன் என தெரிந்தது
காட்டூனிஸ்ட், குறும்பட இயக்குனர்,
சினிமா விமர்சகர் , கவிதை எழுதுனர்,
பத்தி எழுதுனர் ,செய்தியாளர்
பல நாமங்கள் அவனுடன்
பல விருதுகள் தாங்கிய
சகலகலா வல்லவன்
பல ஆக்கங்கள் எழுத எனக்கு
ஆர்வம் கொடுத்த ஓர் நண்பன்

**Vethanayagam Thabendran** added 3 new photos — with Thangarajah Thavaruban and 9 others.
29 September 2016

அன்புத் தம்பி அஸ்வின் சுதர்சன் மறைந்து விட்டதாக இன்று காலை ஊடக நண்பர் ஒருவர் கூறிய போது உடன்பிறப்பு ஒருவரை இழந்தது போன்ற சோகம் மனதைக் கவ்வியது.
மேற்கு ஐரோப்பிய நாடு ஒன்றுக்கு புலம் பெயரும் வழியில் முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் உக்ரெய்ன் நாட்டில் திடீர் மரணத்தைச் சந்தித்தார் என்ற சோக செய்தி மனதைக் கவ்வியது.

எமது வட பிராந்திய ஊடகப் பரப்பில் பிரதேச சபைக்கும் பிரதேச செயலகத்திற்கும் என்ன வித்தியாசமென தெரியாத தம்மை ஊடகவியலாளர் எனச் சொல்லிக் கொள்ளும் பலர் உள்ள நிலையில் அஸ்வின் சுதர்சன் போன்ற உண்மையான திறமைசாலியின் இழப்பு ஈடு செய்ய முடியாதது.
நிச்சயம் இது வெற்றிடம் தான். ஒரு காலத்தில் ஊடக ஜாம்பவான் என எமது தமிழ் உலகம் போற்றக் கூடிய ஒருவனை இழந்து விட்டோம்.

2010 ஆம்ஆண்டின் முற்பகுதியில் வீரகேசரியின் வட பிராந்திய பதிப்பான யாழோசையில் செய்தி ஆசிரியராக இணைந்த அஸ்வினை அங்கு தான் முதன்முதலாக சந்தித்தேன்.பழகிய சில நாள்களிலேயே உடன் பிறப்பு போல மனதில் இடம் பிடித்து விட்டார்.
தனது அதீத திறமையாலும் கடின உழைப்பாலும் அடுத்த வருடம் இவரது பத்தி எழுத்தான கேட்டி.யளோ சங்கதிக்காக இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தால் சிறந்த பத்திரிகையாளராக விருது பெற்றார்.
யாழோசையில் எம்மைக் கடந்து சென்ற மண்வாசனை எனும் தலைப்பில் யாழ்ப்பாண நினைவுகளை எழுதச் சொல்லி ஊக்குவித்தார்.
எழுத கூடிய திறமை வாய்ந்த பலருக்கு களம் தந்த ஒருவர்.

பாகம் 2 நூலுக்கு அட்டைப்படம் வரைந்து தரவேண்டுமென கூறிய போது ஒரு கருப்பொருளுக்கு பல படங்களை வரைந்து திருப்திகரமான படத்தை தந்த ஒருவர்.
பண அன்பளிப்பு கொடுக்க முற்பட்ட போது அண்ணை உங்கள் புத்தகம் போகும் இடமெல்லாம் எனது ஓவியமும் போகும் . அதுவே எனக்கு வெகுமதி என்றான்.பணம் எதுவும் வேண்டாமென கூறிய நல்ல பண்பாளர்.
அன்புத் தம்பியே அமரர் உலகுக்கு சென்று ஆறுதல் அடைவாயாக.
என் புலன்கள் என்னை உணரும் இறுதிக் கலம் வரை
உன்னையும் நினைவில் கொள்வேன்



# ஆவணப்பதிவு

இவ் உலகில் வாழ்ந்த பெரும்பாலான மனிதர்களின் வாழ்க்கை சாதாரணமாகவே முடிவடைந்து விடுகிறது. ஒரு சிலரின் வாழ்க்கைக் குறிப்புகளே சரித்திரமாகின்றன. அந்த வகையில் சரித்திர புருசர்களை உருவாக்குவதில் யாழ் மண்ணும் சளைத்ததல்ல. யாழ் மண் தந்த சரித்திரப் படைப்பாளிகளின் வரிசையில் அஸ்வின் சுதர்சன் அவர்களுக்கும் பெரும் இடமுண்டு

இலங்கையின் தமிழ் ஊடகத்துறை வரலாற்றில் அமரர் அஸ்வின் அவர்களுடய பங்கு கோடிட்டுக் காட்டப்பட வேண்டியது. வாசகர் உள்ளம் கவர்ந்த கேலிச் சித்திரங்கள் பலவற்றை அவர் ஈழத்துப் பிரபல பத்திரிகைகளில் வரைந்துள்ளார்.

எதிர்காலத்தில் நடக்கக் கூடிய நிகழ்வுகளை துல்லியமாகக் கணித்து முற்கூட்டியே மக்களுக்கு உணர்த்தும் வகையில் கேலிச்சித்திரங்கள் வரையும் ஆற்றல் அவருக்கே தனித்துவமான பண்பு. அவரது இழப்பு இலங்கைப் பத்திரிகைத் துறையில் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்

இவ்வாறான கடந்த காலங்களில் அஸ்வின் வரைந்த தீர்க்க தரிசனம் மிக்க கேலிச் சித்திரங்கள் ஆவணமாக்கப்படவேண்டியது அவசியமான தொன்றே.

அஸ்வினின் ஊடகத் துறை நண்பர்களின் ஊக்கத்தினாலும், அஸ்வின் சகோதரர் பற்றிக் அல்பேட் சுகிர்தன் அவர்களின் பேரவாவினாலும் இந் நூல் ஆவணமாக்கப்படுகிறது.

எதிர்காலத்தில் இது ஒரு சிறந்த ஆவணமாகத் திகழும் என்பதில். எந்த வித ஐயமுமில்லை.

தேவி Printers, Jaffna
021 300 3030